## நீதிமொழிகளிலிருந்து படிப்பினைகள்

# ஆதியிலே



இந்த இதழின் முதல் ஏழு கட்டுரைகள், நீதிமொழிகள் 1:2-5ல் காணப்படும் ஏழு கருத்துகளின் வரிசையைப் பின்பற்றுகின்றன. நீதிமொழிகள் புத்தகத்தைப் பற்றி நினைக்கும் போது, நம் நினைவுக்கு வரும் அடையாளமான கருப்பொருள்களைப் பற்றி, கடைசி மூன்று கட்டுரைகள் எடுத்துரைக்கிறது.

"கற்பித்தல்" என்ற தலைப்பு, கற்பித்தலின் ஆதாரத்தையும், சாலொமோன் இராஜா அதை பயன்படுத்திய பல்வேறு வழிகளின் மதிப்பாய்வையும், கடக்க வேண்டிய தடைகளையும், நம் எதிரியையும் வரையறுத்து, பின்னர் அதைப் பின்பற்றுவதற்கான வெகுமதியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. நாம் செய்யும் எல்லாவற்றிலும், புரிந்துகொள்ளுதல் ஒரு பகுதியாக எப்படி இருக்கும் என்பதையும், அதை நாம் எவ்வாறு பெற்று, அதில் நாம் எவ்வாறு வளருகிறோம் என்பதையும், அதன் பின் அதன் கள்ளத்தனத்தையும் "புரிந்துகொள்ளும் ஆற்றல்" என்ற தலைப்புஆராய்கிறது. "ஞானம்" என்பது தெய்வீக அறிவு மற்றும் புரிதலின் திறமையான பயன்பாடு என்று வரையறுக்கப்படுகிறது. நாம் சாலொமோன் இராஜாவின் ஞானத்தை, அப்போஸ்தலர் பேதுருவின் ஆவியின் கிருபைகளுடன் இணைக்கிறோம்.

சாலொமோன் இராஜாவால் குறிப்பிடப்பட்ட நான்கு முக்கியமான மனித பண்புகளாகிய, ஞானம், நீதி, தீர்ப்பு மற்றும் சமத்துவம் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதற்கான நமது அனைத்து முயற்சிகளும் விவேகம் ஆற்றலுள்ள பொருளாக, "விவேகம் ஞானத்தின் செயல்பாடு" என்ற தலைப்பு ஆராய்கிறது.

நம் வார்த்தைகளால் வழிநடத்துவதற்கு முன் அல்லது நம் கால்களால் நகரும் முன் நம் எண்ணங்களின் இறுதியாக வடிகட்டப்பட்ட சிந்தனையே எவ்வாறு நியாயத்தீர்ப்பாகிறது என்பதை "நியாயத்தீர்ப்பின் வழி முறை" என்ற தலைப்பு ஆராய்கிறது. யூத வேதாகமத்தில், நீதிச் செய்வதன் பொருளை விவரிக்கப் பயன்படுத்தும் மூன்று எபிரெய வார்த்தைகளை "நீதி" என்ற தலைப்பு ஆராய்கிறது. யூத கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஆழங்களை வழங்கும் அற்புதமான நுண்ணறிவு தொடர்கிறது. சமத்துவம் என்ற கருத்துக்கும், சமத்துவத்தின் தெய்வீக உத்தரவுக்கும் உள்ள வித்தியாசத்தை "சமத்துவம்" என்ற தலைப்பு வேறுப்படுத்தி காட்டுகிறது. தெய்வீக அன்பு சமத்துவத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளில் வெளிப்படுகிறது. சமத்துவத்தின் அடிப்படையில் நாம் முடிவுகளை எடுக்கும்போது ஆபத்து ஏற்படலாம்.

ஒரு மனிதனாக, இராஜா சாலொமோனைப் பற்றியும், ஒரு பரிபூரணமான மனதையும், விருப்பமுள்ள சிந்தையையும் பெற்றிருக்கவேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் பற்றி "சாலொமோன்: ஒரு வழக்கு ஆய்வு" என்ற தலைப்பு ஆராய்கிறது. நம்முடைய ஆசைகளை எளிமைப் படுத்தவும், இந்த உலகத்தின் இன்பங்களை கைவிடவும், இயேசு நமக்கு அறிவுறுத்திய போது, அவர் சொன்ன வார்த்தைகளின் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகிறது. இந்த ஞானத்தை சாலொமோன் நன்றாக கவனித்திருப்பார். நீதிமொழிகள் 31 ஆம் அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட நல்லொழுக்கத்தின் அருமையான இலட்சியத்தை "குணசாலியான ஸ்திரீ" என்ற தலைப்பு ஆராய்கிறது. இராஜாவாகிய லேமுவேல் தனது தாயிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்து கொள்கிறார், மேலும் சிறந்த தெய்வீக துணையைத் தேடும் அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு திட்டத்தை வழங்குகிறார்.

"ஞானத்தின் வாழ்க்கை முறை" என்ற தலைப்பே நம்முடைய இறுதிக் கட்டுரையாகும். இது ஏதேன் தோட்டத்தில் உள்ள ஜீவ விருட்சம் மற்றும் நீதிமொழிகள் 3 ம் அதிகாரத்தில் சொல்லப்படும் ஞானத்தின் விருட்சத்திற்கும் இடையே உள்ள ஒரு சுருக்கமான ஒப்பீட்டை வழங்குகிறது.

சாலொமோன் இராஜா தனது அற்புதமான வாழ்க்கையில் விட்டுச்சென்ற பல நுண்ணறிவுகளையும், படிப்பினைகளையும் படித்து மகிழ்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தேவனிடமிருந்து அற்புதமான பரிசுகளை பெற்ற ஒரு மனிதரிடமிருந்து நாம் கற்றுகொள்ள வேண்டும். இந்த படிப்பினைகள் அனைத்தையும் தேவனிடமிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற பரிசுகளாக நாம் கருதுவது மிக அவசியம்.

**நவம்பர் / டிசம்பர் 2019, தொகுப்பு 101, எண் 6**


**கற்பித்தலே உங்கள் ஜீவன்** 40
ஒரு வாழ்க்கை துணை

**புரிந்துகொள்ளும் ஆற்றல்** 44
உன்னுடையது அல்ல

**ஞானம்** 49
முத்துக்களை விட சிறந்தது

**விவேகம் ஞானத்தின் செயல்பாடு** 53
எளியவர்களுக்கான நுண்ணுக்கம்

**நியாயத்தீர்ப்பின் வழிமுறை** 57
வார்த்தைகளை உணருதல்

**நீதி** (Tzedek) ?A Tri- Literal Root 59
சரியானதைச் செய்வது

**சமத்துவம் - பரிபூரண நீதி** 61
சமத்துவத்திற்கு மேல் சமபங்கு

**சாலொமோன் ஒரு வழக்கு ஆய்வு** 65
அபூரணமான மனுஷனிடமிருந்து ஞானமுள்ள ஆலோசனை

**குணசாலியான ஸ்திரி** 68
அவளுடைய கிரியைகள் அவளை புகழும்

**ஞானத்தின் வாழ்க்கை முறை** 72
ஞானமுள்ள மனுஷன் செவி கொடுப்பார்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 74
நியாயத்தீர்ப்பின்றி மரணமா?

# கற்பித்தலே உங்கள் ஜீவன்



Timothy Davis

"புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்." (நீதிமொழிகள் 4:13)

நம் வாழ்க்கையில் வெற்றிப் பெறுவதற்கான திறவுகோலை, ஒரு ஆசிரியராக, இராஜாவாகிய சாலொமோன் வழங்குகிறார். சுயத்தை வெல்லும் இரகசியத்தை அவர் நமக்கு சொல்லுகிறார். சுய- சித்தத்தை தோற்கடிப்பதற்கான கருவிகளை அவர் நமக்கு வழங்குகிறார். மேலும் நீதியான பலனை செயல் முறைபடுத்த, சத்தியத்தின் பிரகாசமான ஒளியை நோக்கி நடப்பதற்கான வழியைக் காட்டுகிறார்.

ஏராளமான "கடற்கரை மணலுக்கு" ஒப்பாக விவரிக்கப்படும் தேவன் தந்த சுத்தமான ஞானத்தை கொண்டு சாலொமோன் நம்மிடம் யுகங்களாக பேசுகிறார். (1இராஜாக்கள் 4:29) அறிவுறுத்தல் என்றால் என்ன ? நாம் அதை எவ்வாறு பயன்படுத்தலாம்? எந்த தடைகளை கடக்க வேண்டும் ? எது அல்லது யார் நம்முடைய எதிரி ? மேலும் சாலொமோனின் அறிவுறுத்தலை "உறுதியாக பற்றி கொள்வதற்கான" வெகுமதி என்ன ?

## அறிவுறுத்தல்

"என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்திலே அணிந்து, அவைகளை உன் கழுத்திலே கட்டிக்கொள். நீ நடக்கும்போது அது உனக்கு வழிகாட்டும்; நீ படுக்கும் போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும்." (நீதிமொழிகள் 6:20-22)

சாலொமோன் இராஜா," என் மகனே" என்று கூறி இந்த அறிவுறுத்தலின் காரியத்தை ஏற்றுக்கொள்வது மிகவும் தனிப்பட்டதாக ஆக்குகிறார். அவர் ஒரு தந்தையாக ஆலோசனை வழங்குகிறார். நாம் விடாமுயற்சியுடன் இருந்தால், அறிவுறுத்தலின் கொள்கைள் நமக்குள் வேரூன்றி, சதா காலங்களிலும் நமக்குள் தரித்திருக்கும் என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார்.

அநேகமாக, சாலொமோன் இராஜா தனது சொந்த தகப்பனாகிய தாவீது இராஜாவிடமிருந்து பெற்ற மிக முக்கியமான அறிவுறுத்தல், இஸ்ரயேல் ஜனங்களின் சகல படை தளபதிகள் மற்றும் இளவரசர்களின் முன்னிலையில் பெற்றுக்கொண்டதாக தோன்றுகிறது. "இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அநுபவித்து, உங்களுக்குப்பிறகு அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின்வைக்கும்பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும், நமது தேவனுடைய செவிகேட்கவும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்." (1நாளாகமம் 28:8-9)

அவரது தந்தையின் வாழ்க்கையில் மனம் வருந்துவதற்கான வல்லமையைப் பற்றி நிச்சயமாக பத்சேபாளின் மகனாகிய, இராஜாவாகிய சாலொமோனுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது."அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன் என்றான்; நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்." (2சாமுயேல் 12:13 )

துக்கமும் ஏக்கமும் நிறைந்த தாவீது இராஜா இந்த கடுமையான பாவத்திற்கு பதிலளிக்கும் விதமாக 51ம் சங்கீதத்தை எழுதினார். "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகன பலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக் கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங்கீதம் 51:16-17)

தன்னுடைய தந்தையின் பயங்கரமான பாவத்திற்கான மனந்திரும்புதலினால் சாலொமோன் ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி, சாலொமோன் இளமைப் பருவத்தில் வளர்ந்த போது, தாவீது எவ்வளவு விரைவாக மனந்திரும்பினார் என்பதையும், அதன் விளைவாக தேவனிடமிருந்து அவர் பெற்ற அன்பையும் உணர்ந்தார். அநேகமாக சாலொமோன் இராஜாவின் ஆலோசனைக்கு இதுவே அடிப்படையாக இருக்கலாம். "பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்; ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்" (நீதிமொழிகள் 9:8) இவ்வளவு கடினமான கண்டனத்திற்குப் பிறகும் தாவீது இராஜா நாத்தான் மற்றும் தேவன் மேலும் காட்டிய அன்பை சாலொமோன் இராஜா கண்டார். ஒரு நீதியுள்ள மனிதன்

எவ்வாறு தண்டனையை ஏற்றுக்கொள்கிறார் என்று சாலொமோன் தன் தந்தை தாவீதிடமிருந்து கற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில், சாலொமோன் இராஜா தன் தந்தையின் ஆவியைப் பின்பற்ற மிக கடுமையாக உழைத்தார். சாலொமோன் இராஜாவுக்கு என்ன வேண்டும் என்று தேவன் கேட்டபோது, சாலொமோன் செல்வத்தையும், ஐசுவரியத்தையும், நீண்ட ஆயுளையும் அவர் கேட்க வில்லை. அதற்கு பதிலாக அவர் "நன்மை தீமை இன்னதென்று வகையறுக்க", "ஞானமுள்ள (புரிதலின்) இருதயத்தை" கேட்டார். (1இராஜாக்கள்3:9)

மகிழ்ச்சியும் சமாதானமும் பின்வரும் வழிமுறை களிலிருந்து வந்ததையும், ஞானத்தைப் பெறுவதற்கான முயற்சி மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக மதிக்கப்பட வேண்டும் என்பதையும் சாலொமோன் தனது தந்தையின் அறிவுறுத்தலிலிருந்து அறிந்திருந்தார். (நீதிமொழிகள் 4:5- 7) சாலொமோனின் பதிலில் மகிழ்ச்சி அடைந்த தேவன் அவருக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார். "உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன் என்றார்." (1இராஜாக்கள் 3:14) ஒரே வாக்கியத்தில், தேவன் அவருடைய தந்தையாகிய தாவீதுக்கு தனது ஒப்புதலையும், இராஜாவாகிய சாலொமோன் பின்பற்று வதற்கான தெளிவான பாதையையும் கோடிட்டுக் காட்டினார். தேவனுடைய அறிவுறுத்தலின் பேரில் சாலொமோன் விரைவாக செயல்பட்டார்.

### அறிவுறுத்தலை எவ்வாறு பயன்படுத்துவது

தேவன் மட்டுமே தவறிழைக்காத அறிவுறுத்தலின் ஆதாரம் என்று சாலொமோன் கற்பித்தார். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்." (நீதிமொழிகள் 14:12) என்று அவர் நம்மை எச்சரிக்கிறார். தேவனுடைய திருத்தலுக்கு அடிபணியும்படி சாலொமோன் நமக்குக் கற்றுக் கொடுத்தார். "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும் போது சோர்ந்து போகாதே.தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். "(நீதிமொழிகள் 3:11-12)

சாலொமோன் தேவனிடமிருந்து விலகிச் செல்வதைப் பற்றி தேவன் எச்சரித்தார். சாலொமோனோ அல்லது அவருடைய பிள்ளைகளோ மற்ற தெய்வங்களைப் பின்பற்றினால், இஸ்ரயேல் தேசத்திலிருந்து அறுப்புண்டு போவார்கள் என்று அவர் உறுதியளித்தார். (1இராஜாக்கள் 9:7) துரதிர்ஷடவசமாக, சாலொமோன் இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றவில்லை. ஆகையால், தேவன் அவரைத் தண்டித்தார். அவர் இறந்த பிறகு அவருடைய இராஜ்யத்தை அவரிடமிருந்து பறிக்கப்படும் என்று கூறினார். (1இராஜாக்கள் 11:11-13)

தேவன் சாலொமோனை தண்டித்தார், ஆனால் அவர் அவரை வெறுத்ததால் அல்ல. மாறாக, தேவன் நீதியாகவும், அன்பாகவும் இருப்பதால் அவரை வெறுமனே சிட்சித்தார். நமக்கும் இப்படியாகவே, நாம் தேவனைப் பின்பற்றும்போது, நம்முடைய பாத்திரம் நிரம்பி வழிகிறது. ஆனால் நாம் தேவனை விட்டு திரும்பி, அவரை மறுத்தலித்தால், அவர் நம்மேல் உள்ள கோபத்தினால் அல்ல, அவருடைய அளவற்ற அன்பினால் அவர் நம்மையும் திருத்தி சிட்சிப்பார். நாம் தேவனுடைய அறிவுறுத்தலை பின்பற்றவேண்டும். நம்முடைய மாம்ச சித்தத்திற்கு பலியாகிவிடக்கூடாது.

### தடைகளை மேற்கொள்ளுதல்

நாம் எதிர்கொள்ளும் அதே எதிரிகளில் ஒன்றை சாலொமோனும் எதிர்கொண்டார்: மாம்சம். மாம்சம் சுயநலமானது, பெரும்பாலும் அன்பற்றது, நன்மை யானதிலும், சரியானதிலும் எப்போதும் கவனம் செலுத்தாது. தேவனைப் பிரியப்படுத்த நாம் மாம்சத்தின் தேவபக்தியற்ற ஆசைகளுக்கு எதிராக தொடர்ந்து போராட வேண்டும். நம்முடைய மாம்சத்தின் தடையை நம்மால் தனித்து சமாளிக்க முடியாது. "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப் போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது."(ஏசாயா64:6)

நாம் தேவனுடைய வழிநடத்தலையும், ஞானத்தையும் புரிதலையும் நாட வேண்டும். ஆரம்ப காலங்களில், சாலொமோன் இராஜா தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டதையும் அறிந்திருந்தார். தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதம் இல்லாமல், அவருடைய ஜனங்களை நீதியுடனும் நியாயத்துடனும் ஆட்சி செய்வதற்கான அவரது சிறந்த முயற்சிகளும் முழுமையானது அல்ல என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். ஆகையால், சாலொமோன் இராஜா தன்னுடைய சொந்த வீழ்ச்சியடைந்த மனுக்குலத்தின் வரம்புகளை மேற்கொள்வதற்கு தேவனிடம் உதவிக் கேட்டார். தேவனுடைய சித்தத்தின்படி நாம் கேட்டால், பெற்றுக்கொள்ளலாம் என்று இயேசு கூறினார். (மத்தேயு7:7) நம்முடைய தேவைகளுக்காக பரலோக தகப்பனிடம் விண்ணப்பிக்கக்கூடிய சிலாக்கியத்தை பெற்றிருக்கும் நாம் எவ்வளவு பாக்கியசாலிகள்!

சாலொமோன் இராஜாவின் கனவில் தேவன் அவருக்கு தோன்றிய, அதே சூழ்நிலையில் நாமும் இருக்கிறோம். எனவே இப்போது தேவனிடம் நாம் எதை கேட்கிறோம்? நாம் அவரிடம் பொருள்களை கேட்கிறோமா? சாலொமோன் ஒரு வலுவான இராணுவத்தையோ, நல்ல அறுவடையையோ அல்லது தேசத்தில் சமாதானத்தையோ கேட்டிருக்கலாம். ஆனால் இவை அவருடைய மாம்சத்தால் ஆனவை. மேலும் அவருடைய மாம்சத்தை ஒரு தடையாக கண்டார். மிக கடினமான, நேரத்தைச் செலவழிக்கும் மற்றும் சோர்வடையச் செய்யும் சவால்கள் உட்புறமாக போராடுவதை சாலொமோன் இராஜா புரிந்து கொண்டார். "நீதிமான் தன் அயலானைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன்; துன்மார்க்கருடைய வழியோ அவர்களை மோசப்படுத்தும்." (நீதிமொழிகள் 12:26)

சாலொமோன் இராஜா தனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவனை மதிப்பதை தேர்ந்தெடுத்தார். ஆனால் தேவனை கனப்படுத்துவதிலிருந்து எவ்வளவு எளிதாக விழுந்துபோக முடியும் என்பதையும் அவர் நமக்கு கற்பித்தார். சாலொமோன் தேவனை தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் வைத்து அவரை அதிகமாக நேசித்தார், ஆனால் அவர் மாம்சத்தில் பலவீனமாகவும் இருந்தார். ஆலயத்தை முடித்துவிட்டு, சுற்றியுள்ள எல்லா நாடுகளிலும் பெரிய, சக்திவாய்ந்த புகழ்பெற்ற இராஜாவாக ஆனபின், அவர் தனது மாம்சத்திற்கு செவிக்கொடுக்க தொடங்கினார் -"கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லி இருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசை வைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்." (1இராஜாக்கள் 11:2)

சாலொமோன் தன் மனைவிகள் மற்றும் மறுமனையாட்டிகளின் தெய்வங்களையும், பாரம்பரியங் களையும் ஏற்றுக்கொண்டு, தேவனிடமிருந்து தன் இருதயத்தை திருப்பினார். அவர் சரியான மற்றும் பாராட்டத்தக்க வழியில் நடக்கத் தொடங்கிய போது, துன்மார்க்கரின் வழிகளால் அவர் ஈர்க்கப்பட்டார். நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், நாம் தேவனுடைய வழிகளைக் கவனிக்கவும், மாம்சத்தின் மயக்கங்களிலிருந்து நம்மைப் பறிக்கவும் நாம் கவனமாக இருக்க வேண்டும். சோதனைகள் மற்றும் பாவத்தின் தடைகளை சமாளிப்பதற்கு நாம் வலிமையானவர்கள் என்று நாம் நினைக்கலாம், ஆனால் அப்படி அல்ல என்பதை சாலொமோன் இராஜாவிடமிருந்தும் தாவீது இராஜாவிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்கிறோம்.

### நம்முடைய எதிராளி

தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமானதும், கடுமையானதுமாகவும் இருந்தது. சாலொமோன் இராஜா தனது புறஜாதி மனைவிகளின் தெய்வங்களுக்காக சிலைகளை உருவாக்கத் தொடங்கிய பிறகு, "ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற் போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்." (1இராஜாக்கள் 11:11) என்று தேவன் அவரிடம் பேசினார். தேவனுடைய தண்டனை நேரடியானதும், மாற்ற முடியாததுமாக இருந்தது. சாலொமோன் தன் இராஜ்யத்தின் வடக்கு பகுதியை தன் மகனுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக தன் வேலைக்காரனிடம் இழக்க நேரிட்ட சாபத்தை பெற்றார். அநேகமாக சாலொமோன் இராஜா தனது சொந்த பாவத்தை உணரும்போது, தேவன் அளிக்கும் ஞானத்தின் நீடித்த சாட்சியத்தை விட்டுச்செல்ல ஒரு போராட்டத்தைத் துவக்கியிருக்கக்கூடும்.

சாலொமொனின் நீதிமொழிகள் மற்றும் பாடல்கள் மாம்சத்தின் ஆற்றலுக்கான அவரது நீடித்த சாட்சியாக அமைந்தது. சாலொமோனின் எழுத்துக்கள் இந்த எதிரியை அடையாளம் காணவும், அதை மேற்கொள்வதற்கான கருவிகளையும் வழங்குகிறது.

மாம்சத்தின் மயக்கும் சக்தியைப் பற்றி சாலொமோனின் எச்சரிக்கைகள் கூரானவை, சக்தி வாய்ந்தவை மற்றும் அவரது சொந்த பாவத்தை வெளிப்படுத்துகின்றதாயும் உள்ளது. "கட்டளையே விளக்கு,வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவவழி.அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீக்கும், இச்சகம் பேசும் நாவையுடைய பரஸ்திரீக்கும் விலக்கிக் காக்கும். உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே. வேசியினிமித்தம் ஒரு அப்பத்துணிக் கையையும் இரக்கவேண்டியதாகும்; விபசாரியானவள் அருமையான உயிரை வேட்டையாடுகிறாள்" (நீதிமொழிகள் 6:23-26) அவளை பின்பற்றுபவர்களின் விதியைப் பற்றி ஒரு "முன்னறிதலை" சாலொமோன் கூறுவதாக தெரிகிறது. "அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்." (நீதிமொழிகள் 7:27)

### வாக்களிக்கப்பட்ட வெகுமதி

தேவனுடைய அறிவுறுத்தலைப் பின்பற்று வதற்கான வெகுமதி, உள்ளான சமாதானம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியான வாழ்க்கையாகும். ஆவிக்குரிய வளமான வாழ்க்கைக்கு தேவனிடமிருந்து அறிவுறுத்

தலை ஏற்றுக்கொள்வது அவசியம் என்பதை சாலொமோன் அனுபவத்தால் கற்றுக்கொண்டார்.

தேவனுடைய அறிவுறுத்தலைப் பின்பற்ற முயற்சிக்கும் போது, கடினமான மற்றும் தாங்க முடியாத சோதனைகளும் நம் வழியில் வரக்கூடும். சாலொமோன் போலவே, நாமும் நிதானமாக முன்னோக்கத்தை கொண்டிருக்க வேண்டும்.

யாக்கோபின் புத்தகம் புதிய ஏற்பாட்டின் நீதிமொழிகளாகக் கருதப்படுகிறது, மேலும் சோதனைகளையும், பரீட்சைகளையும் நாம் அனுபவிக்கும் போது, இது சில அழகான உற்சாகமூட்டும் காரியங்களை பிரதிபலிக்கிறது.

"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்." (யாக்கோபு1:2-6)

சுவிசேஷ யுகத்தின் இறுதி ஆண்டுகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம், இயேசுவின் சரியான முன் மாதிரியைப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம் : personification of wisdom . மற்றும் தேவனுடைய சித்தம் செய்தல். கூடுதலாக, எபிரெயர் 11 அதிகாரத்தில், பழங்கால விசுவாசமுள்ள புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளின் எடுத்துக்காட்டுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தப் படுகிறோம். தேவனுடைய முழு ஆலோசனையிலிருந்து வரும் அறிவுறுத்தலுக்கு நாம் கவனம் செலுத்துவோம், அவரால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ திருப்தியடைவோம்.

# புரிந்துகொள்ளும் ஆற்றல்



"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து," (நீதிமொழிகள் 3:5)

புரிந்துக்கொள்ளும் ஆற்றல் என்றால் என்ன? இது அறிவா? ஆம். இது தாழ்மையா? ஆம். இது தேவனை புகழ்வதா? ஆம். இது நீதியான வாழ்க்கையா? ஆம். ஞானம், விவேகம், வைராக்கியம், சமாதானம் மற்றும் பிற விஷயங்களில் இது பயன்படுத்தப்படுகிறதா? ஆம். இது எப்படி சாத்தியம்?

தேவனுடைய சிருஷ்டிப்பு நமக்கு ஒரு ஆதாரத்தை தருகிறது. சோடியம் (Na) என்ற இரசாயனம் பூமியின் மேல், ஏழாவது மிகுதியான ஒரு இராசாயனமாகவும், கடல் நீரின் ஒவ்வொரு துளியின் ஒரு பகுதியாக இருப்பினும், அதன் தூய்மையான வடிவத்தில் இயற்கையாக அது காணப்படுவதில்லை. சோடியம் என்பது பல சேர்மங்களின் ஒரு பகுதியாகும் ; உப்பு (NaCl), சோடா சாம்பல் (soda ash (Na2CO3), பேக்கிங் சோடா (NaHCO3), காஸ்டிக் சோடா (NaOH), சோடியம் நைட்ரேட் (NaNO3) மற்றும் போராக்ஸ் (Na2B4O7 10H2O)

புரிந்துகொள்ளும் கொள்கைகளை பிரதிபலிப்பதற்கு அறிவியல், மனிதனின் சிறந்த முயற்சியாக இருக்கலாம். "நான் விஞ்ஞான உணர்வை விரும்புகிறேன் - நிறுத்தி வைப்பது, உறுதியாக இருப்பது, ஆனால் மிகவும் உறுதியாக தெரியவில்லை, ஆதாரங்கள் அவர்களுக்கு எதிராக இருக்கும்போது, சரணடைவதற்கான விருப்பம் :இது இறுதியில் நன்றாக இருக்கிறது - இது எப்போதும் திறந்திருக்கும் வழியை வைத்திருக்கிறது - எப்போதும் வாழ்க்கை, சிந்தனை, பாசம், முழு மனிதனும், ஒரு தவறுக்குப் பிறகு மீண்டும் முயற்சிக்க வாய்ப்பை தருகிறது - அதாவது தவறான யூகத்திற்குப் பிறகு." என்பதை வால்ட் விட்மேன் கவனித்தார்.

### தேவனே அதற்கு ஆதாரம்

உண்மையான புரிதல் தேவனிடமிருந்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக வருகிறது. தேவன் இப்பிரபஞ்சத்தை உருவாக்க புரிதலைப் பயன்படுத்தினார். (எரேமியா 10:12) தேவனின் புரிதல் எல்லையற்றது. (ஏசாயா 40:28)

தேவன் தனது புரிதலை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். "ஆனாலும் மனுஷரில் ஒரு ஆவியுண்டு; சர்வவல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ள வர்களாக்கும்."(யோபு 32:8) இந்த புரிதலை நமக்கு அளிப்பதில் இயேசுவுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. "அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்." (1யோவான் 5:20)

புரிதலை தேடுபவர்களுக்கு தேவன் அதை வழங்குகிறார் - "தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத் தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார்." (1இராஜாக்கள் 4:29)

### வாழ்வதற்கு புரிதலைப் பெற்றுக்கொள்ளுங்கள்

தேவனிடம் "ஆலோசனையும் புரிதலும் இருக்கிறது" என்று யோபு நமக்குக் கற்பிக்கிறார். (யோபு 12:13) அந்த "ஞானத்தைப் பெறவும், எல்லாவற்றையும் புரிந்து கொள்ளும்" ஆற்றலையும் பெறவும் சாலொமோன் நம்மை ஊக்குவிக்கிறார். (நீதிமொழிகள் 4:4,7) இந்த உண்மையை இயேசு தனது உவமைகளில் மறைத்தார், ஆனால் உண்மையில், அதை விரும்பி, தேடுபவர்களுக்கு அதை புரிந்துகொள்ளும் ஆற்றலை அளிக்கிறார். (மத்தேயு13:13)

விதைப்பவரின் உவமையைப் பற்றி இயேசுவின் சீஷர்கள் அவரை விளக்கச் சொன்னார்கள். அதற்கு இயேசு உண்மையான புரிதல் என்பது அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வதோடு நின்றுவிடாமல், வாஞ்சை, கனிதருதல் மற்றும் கிரியைகளுடன் தொடரும் என்று சுட்டிக்காட்டினார். (1யோவான் 15:7-8) பின்னர், இயேசுவைப் புரிந்துகொள்ளக்கூடிய சீஷர்களின் விருப்பமானது, மற்றவர்கள் அனைவரும் அவரைவிட்டு சென்றாலும், அந்த சீஷர்களை அவரிடம் நெருக்கமாக வைத்திருந்தது. "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"(யோவான் 6:68)

இந்த புரிதல் இயேசுவோடு நாம் நெருக்கமாக இருப்பதற்கும், அதிகமாக அவரை போல வாழ்வதற்கும் உதவுகிறது. இந்த புரிதல் தேவனோடு நெருக்கமான ஐக்கியத்திற்கான ஒரு திறவு கோலாகும், இது அவருடைய திட்டங்களை நமக்குத் திறக்கிறது. மேலும் சத்தியத்தின் கொள்கைகளை சமரசம் செய்ய வேண்டிய அவசியமில்லாமல், நம் சகோதரர்களுடனும், உலக

நண்பர்களுடனும் உண்மையான உறவுகளுக்கு இது வழிகாட்டுகிறது. சங்கீதக்காரர் இதை மிகச் சிறப்பாக கூறுகிறார்,"உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்." (சங்கீதம் 119:144)

## புரிதலை எப்படி பெறுவது

(a) அதற்காக ஜெபியுங்கள், கேளுங்கள், அழுதும் மன்றாடுங்கள் (2தீமோத்தேயு 2:7, நீதிமொழிகள் 2:3, சங்கீதம் 119:169) (b) தேவனுடைய வார்த்தையை மனத்தாழ்மையுடன் படியுங்கள். (எபேசியர் 3:4) (c) ஞானியினிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 1:5) (d) தெய்வீக பெற்றோரிடமிருந்து அதை கற்றுக்கொள்ளுங்கள். (நீதிமொழிகள் 4:1)(e) தாழ்மையுடன் இருங்கள். (சங்கீதம் 119:130) (f) அதைப் பெறுவதற்கு உங்களை முழுமையாக (ஒப்புக்கொடு) முதலீடு செய்யுங்கள் (நீதிமொழிகள் 23:23) (g) "நான் உமது அடியேன்; உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்." (சங்கீதம் 119:125) என்று தேவனிடத்தில் உங்கள் அர்ப்பணிப்பை அறிவியுங்கள்.

## புரிதலில் வளர்ச்சி அடைதல்

விதைப்பவரின் உவமையில், தேவனுடைய வார்த்தையை புரிந்துகொண்டு பலன் தரும் இருதயம் நல்ல நிலமாகும். (மத்தேயு13:1-9) விதை வளர்ச்சி யடையாமல், எந்த கிரியையும் இல்லாமல், எந்தவிதமான புரிதலும் இருக்காது. அது வெறும் இறுமாப்பை உண்டாக்கும் அறிவை கொடுக்கும். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் புரிதலைப் பயன்படுத்தும்போது அது முதிர்ச்சியடையும்.

(a) தேவனுடைய பிரமாணங்களை நாம் கடைப்பிடிக்கும் போதும் (சங்கீதம் 119:34), (b)தேவனிடம் ஜெபித்து, அவரை துதிக்கும் போதும் (சங்கீதம் 111:10, சங்கீதம் 47:7, 1கொரிந்தியர் 14:15), (c) தீமையை விட்டு விலகும்போதும் (யோபு 28:28) (d) பொய்யையும், மாய்மாலத்தையும் வெறுக்கும்போதும் (சங்கீதம் 119:104)(e) சந்தோஷத்தைக் கண்டுபிடித்து, அதில் மகிழும்போதும் (நீதிமொழிகள் 19:8, 3:3) (f) கேட்டு, நம்முடைய இருதயங்களை மாற்றிக்கொள்ளும் போதும் (நீதிமொழிகள் 2:2, 1:5) (g) அதைப் பற்றி தியானிக்கும்போதும் (சங்கீதம் 49:3, 119:99) (h) நம்முடைய செயல்களில் தாழ்மைப்படும்போதும் (யாக்கோபு 3:13) (i) கோபிப்பதற்கு தாமதிக்கும்போதும் (நீதிமொழிகள் 2:11, 17:27) (j) சாதனைகளினால் பெருமை கொள்ளாமலும் (நீதிமொழிகள் 28:11)(k) அதை இளைஞர்களுக்கு கற்றுக் கொடுக்கும் போதும் (நீதிமொழிகள் 5:1) நம்முடைய புரிதல் முதிர்ச்சி அடையும்.

நாம் முதிர்ச்சியடையும் போது, தேவனுடைய எல்லையற்ற புரிதலை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். மேலும் நம்முடைய புரிதலை அவருடைய தரங்களுக்கு (மதிப்பளவுக்கு) ஏற்றவாறு தொடர்ந்து சீரமைக்க வேண்டும். (சங்கீதம் 147:5, நீதிமொழிகள் 3:5, யோபு 36:5)

## போலியான மனித நிலை

"மூடனை நூறடி அடிப்பதைப் பார்க்கிலும், புத்திமானை வாயினால் கண்டிப்பதே அதிகமாய் உறைக்கும்." (நீதிமொழிகள் 17:10)

உண்மையான ஆவிக்குரிய மதிப்புள்ள எதற்கும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட போலி ஒன்று உள்ளது. புரிதலும் இதற்கு விதிவிலக்கல்ல. தேவனிடமிருந்து வரும் புரிதலைப் போலன்றி, காணக்கூடிய பொருள்களினால் தொடர்ந்து சாட்சியம் அளிக்கப்படுவதால், போலியான மனித புரிதலை புரிந்துக்கொள்வது எளிதாக இருக்கிறது. கணிக்கத்தக்க வகையில், இது பெருமை மற்றும் உருவ வழிபாடு செய்யுமளவுக்கு தரங்குறைந்தது. தேவனுடனான உறவில் முறிந்து போவதற்கான இரண்டும் முக்கிய அடையாளங்கள் இவைகளே. உண்மையான புரிதலைப் பின்பற்றுவதன் மூலம் நாம் மனித போலித்தன்மையை எதிர்ப்பது மிகவும் முக்கியமானது. மனித மகத்துவத்திற்கான விருப்பத்தால் தேவனுடன் கூட தெய்வீக புரிதலை இழக்க முடியும் என்பதை சாலொமோனின் எச்சரிக்கைக் இதை காட்டுகிறது. இதற்கு நேர்மாறாக தானியேலின் உதாரணம், மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட, தெய்வீக புரிதலுடன் உண்மையாக இருக்க நமது திறனுக்குள்ளாக நம்மை வழிநடத்துகிறது.

## போலியான புரிதலுக்கு எதிராக உண்மையான புரிதல்

*சாதனைகளைப் பற்றி பெருமை பேசும், குறிப்பாக அவைகள் புலப்பட்டு, மறுக்க முடியாத போது (ஏசாயா 10:13) - எதிராக - ஒருபோதும் முழுமையடையாது, தேவன் மீது நம்பிக்கை கொள்ளும், அதன் திறமைகள் அல்லது தகுதிகளின் மேல் சார்ந்திராது. (நீதிமொழிகள் 3:5)

*இது பெருமையுள்ளதும், தன்னை திருத்திக் கொள்ள மறுக்கக்கூடியதாக உள்ளது. (நீதிமொழிகள் 15:32) - எதிராக - இது பணிவாகவும், தேவனுடைய வார்த்தையின்படி கண்டிக்கப்படும் போது கேட்கக் கூடியதாகவும் உள்ளது. (சங்கீதம் 119:130, நீதிமொழிகள் 1:5,19:25)

*இது வீண், இயல்பாகவே ஒருவரின் சுய இன்பங்களுக்காக வாழ்கிறது (யோபு 11:12, சங்கீதம் 32:9) - எதிராக - அவருடைய கொள்கைகளின்படி வாழ

வழிகாட்டும் தேவனுக்காகவும் வாழ்கிறது. (சங்கீதம் 119:34, 111:10)

*மற்றவர்களை ஒடுக்க பயன்படுகிறது (நீதிமொழிகள் 28:16)- எதிராக -ஏழைகளுக்கு நியாயம் செய்ய பயன்படுகிறது (நீதிமொழிகள் 29:7). நம் கைகளின் கிரியைகளை விக்கிரங்களாக மாற்றுகிறது (ஏசாயா 44:19, ஓசியா 13:2) -எதிராக -தேவனை புகழ்வதற்கு நம்மை மேம்படுத்துகிறது (சங்கீதம் 47:7)

*தேவன் அல்ல, நாமே நம்முடைய சொந்த வேலையாக இருக்கிறோம் என்று நினைக்க வைக்கிறது (ஏசாயா 29:16) - எதிராக - நாம் தேவனுடைய புரிதலைப் பெறும் மிக எளிமையானவர்கள் என்பதை அறிந்திருக்கிறது (மத்தேயு11:25, நீதிமொழிகள்9:6, சங்கீதம்119:125,130)

*பேராசையுள்ளதும், ஓரளவுக்கு லஞ்சமும் வாங்குகிறது (பிரசங்கி 7:7)-எதிராக - நேரான பாதைகளில் நம்மை வழிநடத்துகிறது (நீதிமொழிகள் 15:21)

*தீமை செய்வதைப் பற்றி நமக்கு அறிவிக்கும், ஆனால் நன்மை செய்வதைப் பற்றி அது அறியாது (எரேமியா 4:22) - எதிராக - ஞானம், நீதி சமத்துவம் மற்றும் ஒவ்வொரு நல்ல பாதையிலும் நம்மை வழிடத்தும் (நீதிமொழிகள் 2:2-9)

*நன்மையானவைகளை பார்க்கவோ கேட்கவோ முடியாத கண்களையும் காதுகளையும் இது நமக்குத் தருகிறது (எரேமியா 5:21)- எதிராக - "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்." (மத்தேயு13:16)

* நம்மை தோல்வியடையச் செய்யும் (பிரசங்கி 10:3) - எதிராக - ஒருபோதும் தோல்வியடையாத தேவனிடமும், "எல்லா புத்திக்கும்மேலாக கிறிஸ்துவின் சமாதானத்துடனும்" நம்மை வழிடத்தும் (பிலிப்பியர் 4:7)

*தேவன் போலியான புரிதலை அழிக்கிறார் (எசேக்கியேல் 28:2-8, ஏசாயா 27:11) - எதிராக - தேவன் தவறிழைக்காத, சர்வவல்லவர். அவரது புரிதல் எல்லையற்றது மேலும் நித்திய ஜீவனை நோக்கி நம்மை வழிநடத்துகிறது (சங்கீதம் 147:5, 1யோவான் 5:20)

அறிவு சார்ந்த ஆபத்தை காட்டிலும் போலியான புரிதலுக்குள் நழுவி விழுவது மிகவும் ஆபத்தானது. நம்முடைய மாம்ச மனித இயல்பு காணக்கூடிய முடிவுகளை எதிர்பார்க்கிறது மேலும் நம்மை வழுக்கும் பாதைகளில் நடக்க ஊக்குவிக்கிறது. ஒழுக்கக்கேடான பாவங்கள் தெய்வீக புரிதலில் இருந்து விரைவாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும் நம்மை அதிலிருந்து அகற்றிவிடும். (ஓசியா 4:11) கிரியைகளில் மற்றும் சில விஷயங்களில் நாம் ஏற்கனவே "வைத்திருக்கும்" தவறான நம்பிக்கையும், நம்முடைய சரியான புரிதலை மெதுவாகவும், சுமுகமாகவும் அழித்துவிடும். காலப்போக்கில், நாம் குழப்பமடைந்து மந்தமாக மாறிவிடுவோம். "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம் பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்;" (வெளிப்படுத்தல் 3:17)

இருப்பினும், நாம் தோல்வியுற்றால், நாம் மீண்டும் அவருடன் இணக்கமாக வருவதற்கு ஒரு வழியை வழங்குவதன் மூலம் தேவன் இன்னும் மகிமைப்படுவார். தேவனுடைய மீட்பின் மூன்று தெளிவான எடுத்துக்காட்டு களைப் பார்ப்போம்.

## (1) லவோதோக்கியா சபைக்கு சொல்லப்பட்ட செய்தி

வெளிப்படுத்தல் 3:18 - நாம் நெருப்பில் புடமிடப்பட்ட தங்கத்தையும், வெண் வஸ்திரத்தையும், கண்களுக்கு கலிக்கமும் வாங்கும்படிக்கு அறிவுறுத்தப் படுகிறோம். நீதிமொழிகள் 23:23 ல் சத்தியத்தையும், ஞானத்தையும் புரிதலையும் வாங்கவும் அவற்றை விற்க வேண்டாம் என்று நமக்கு சொல்லப்படுகிறது.

வெளிப்படுத்தல் 3:19- இயேசு நம்மேல் உள்ள அன்பினால் நம்மை கண்டிக்கிறார். எனவே, இதை பெயரளவான சபைக்கு பயன்படுத்திவிடாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டும். தேவனுடைய புரிதல் எவரையும் வெறுக்காது என்று யோபு 36:5 சொல்கிறது.

வெளிப்படுத்தல் 3:20 - இயேசுவே நம்முடைய ஆசிரியர், அவரே நம்மை போஷிப்பவர் மேலும் அவர் நம்முடன் இருப்பதில் மகிழ்கிறார். இதேபோல், நாமும் அழுது, தேவனிடம் வந்து, அவருடைய வார்த்தையின்படி புரிதலை பெறமுடியும் என்று சங்கீதக்காரன் சொல்கிறார். (சங்கீதம் 119:169)

வெளிப்படுத்தல் 3:21-22- ஜெயம் கொண்டவர்கள் இயேசுவோடு அவருடைய சிங்காசனத்தில் அமர்வார்கள் என்று இந்நேரத்தில், ஒரு வாக்குத்தத்தம் அளிக்கப் படுகிறது. "ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவர் கேட்கக்கடவன்".

## (2) ஞானம் கட்டுகிறது

"வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே (புரிதலினாலே) நிலை நிறுத்தப்படும்" (நீதிமொழிகள் 24:3) பாபிலோனின் சிறைவாசத்திற்கு முன்பு, இஸ்ரயேல் தேவனைப் பற்றி புரிந்துகொள்வதில் குறைவுப்பட்டார்கள். உத்தரவுகளைப் பெறுவதற்கு தேவனிடம் செல்ல அவர்கள் மறுத்துவிட்டார்கள். (எரேமியா 4:22, 5:21)

சிறைபிடிக்கப்பட்ட காலத்தில் அவர்கள் தங்களது குறைவான புரிதலைப் பற்றி நன்கு உணர்ந்தார்கள். 70

ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வந்த விசுவாசமுள்ள யூதர்களுக்கு தேவன் தேவை என்பதையும் அவர்கள் புரிந்துக்கொள்ளுதலில் குறைவானவர்கள் என்பதையும் அறிந்துக்கொண்டார்கள். இஸ்ரயேல் தங்கள் புதிய வீட்டில் குடியேறிய போது, எதிரிகளால் அவர்கள் அழிக்கப்படுவதற்கு தயாராக இருந்தபோது, அவர்கள் மனத்தாழ்மையைக் கற்றுக்கொண்டு, இஸ்ரயேலின் ஆசீர்வாதங்களின் ஆதாரமும், ஊற்றுமாயிருக்கிற தேவனை நோக்கி பார்த்தார்கள். மேலும் அவருடைய வார்த்தைகளை கவனமாக கேட்டார்கள். "அப்படியே ஏழாம் மாதம் முதல்தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டுவந்து.." (நெகேமியா8:2) கடைசியல் இஸ்ரயேல் தேவனை புரிந்துகொண்டு வணங்கினார்கள். அவர்கள் புதிதாகக் கண்டறிந்த புரிதல், இஸ்ரயேல் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப அவர்களுக்கு உதவியது. இது தேவனுடைய இராஜ்யத்தின் தொடக்கத்தைப் பற்றிய ஒரு அற்புதமான உவமை.

**(3) தானியேலின் வாழ்க்கை**

உண்மையான புரிதல் நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் எவ்வாறு கட்டளையிடவேண்டும் என்பதற்கு தானியேலின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. அவர் சிறிய வயதிலேயே தெய்வீகப் புரிதலைப் பெற்றிருந்தார். (தானியேல் 1:4, 17, 20) இராஜாக்களும், இராஜ்யங்களும் வீழ்ச்சி அடைந்து, உயர்ந்த போதும் அவர் அங்கீகரிக்கப்பட்டார். அவர் இஸ்ரயேலை மட்டும் அல்ல அவரை சிறைபிடித்த நேபுகாத்நேச்சாரின் மீட்புக்கும் ஒரு முக்கிய பங்கு வகித்தார்! தானியேலிடமிருந்து நடைமுறை பாடங்கள் பின்வருமாறு:

(a) அவர் தேவனுடைய வார்த்தையைப் படித்து, அவருடைய கட்டளைகளைப் பின்பற்றினார்.

(b) அவரும் அவரது நண்பர்களும் விக்கிரகாராதனையை மறுத்து, தேவனை வெளிப்படையாக வணங்கினார்கள், அவ்வாறு செய்வதினால் அவர்களின் வாழ்க்கையை இழக்கக்கூடும் என்பதை அவர்கள் முழுமையாக புரிந்திருந்தார்கள்.

(c) சொப்பனங்களை வெளிப்படுத்தவும், விளக்கவும் அழைக்கப்பட்டபோது, தானியேல் தனது சொந்த புரிதலைப் பற்றி கூறாமல், தேவனையே மகிமைப்படுத்தினார். (தானியேல் 2:21)

(d) தேவனை புகழ்வது பல இராஜாக்களின் கட்டளைகளுக்கு முரணானதாக இருந்தபோதிலும், அவர்கள் தானியேலின் புரிதலைக் கண்டு தேவனைப் புகழ்ந்தனர். (நேபுகாத்நேச்சார், தரியு)

(e) தானியேல் உண்மையைப் பேசினார், தீர்க்கதரிசனம் உரைத்தார், புரிதல் தேவைப்படும்போது இராஜாக்களை கண்டித்தார்: லவோதோக்கேயாவின் மீதும் "மெனே, மெனே, தெக்கேல், உபார்சின்" (தானியேல்5)

(f) வாழ்க்கையின் பிற்பகுதியிலும் கூட, தானியேல் தாழ்மையுடனும், ஆர்வத்துடனும், கற்றுக்கொள்ளும் விருப்பத்துடன் தரிசனங்களைப் புரிந்துகொள்ளும்படி தேவனிடம் மன்றாடினார். நம் வாழ்க்கையிலும் புரிதலை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு தானியேல் ஒரு அழகான எடுத்துக்காட்டாவார். (தானியேல்9) அவர் முரண்பாடுகளுக்கு எதிராக விசுவாசத்திற்கான ஒரு வார்ப்புருவை (template) நமக்கு விட்டு சென்றிருக்கிறார். உதாரணமாக, எரேமியாவின் எழுத்துக்களினால், இஸ்ரயேலின் சிறையிருப்பு முடிவுக்கு வந்துவிட்டதாக தானியேல் புரிந்து கொண்டார். மேலும் அவர் அதைப் பற்றி ஏதாவது செய்யக்கூடிய ஒரு நிலையைத் திரும்ப அடைந்தார். முதலில் தேவனுடைய விருப்பம் நிறைவேற வேண்டும் என்று தானியேல் ஜெபித்தார். அவருடைய ஜெபம் நேர்மையானதும், நம்பமுடியாத அளவுக்கு தாழ்மையானதாகவும், உருக்கமானதாகவும் இருந்தது. அவர் தேவனுடைய கிருபையை கேட்டார் மேலும் அதற்காக அவரோ இஸ்ரயேலரோ தகுதியற்றவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டார். அவர் தேவன் மீதும், தேவனுடைய ஜனங்கள் மீதும், அவர்களை ஒடுக்குபவர் களிடமும் அன்பை வெளிப்படுத்தினார். ஜெபத்தில் தேவனை அணுகிய பின்னரே, அவருடைய ஞானம் மற்றும் சரியான நேரத்தில் அவர் செய்த செயல்கள், இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குத் திரும்புவதற்கான கதவைத் திறந்தன.

தெய்வீக தைரியம், நம்பகத்தன்மை மற்றும் நீதியுள்ள கொள்கைளின் மேலுள்ள விசுவாசம் என்பதற்கு, தானியேலின் அற்புதமான எடுத்துக்காட்டு, ஆக்கமுள்ள தெய்வீக புரிதலின் மூலம் நாம் தாக்கம் உண்டாக்குபவர்களின் வாழ்க்கை எவ்வாறு மாறக்கூடும் என்பதைக் காட்டுகிறது. (தானியேல் 4) நேபுகாத்நேச்சார் தன் வீழ்ச்சியைக் குறித்து சொப்பனம் கண்டபோது, தானியேல் மகிழ்ச்சி அடையாமல், மீகா 6:8 வின் ஆலோசனையை இராஜாவுடன் பகிர்ந்து கொண்டார். "தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்

படி ஜாக்கிரதையாக இருப்பதற்கு.... சத்திய வசனத்தை நிதானமாகப் பகுத்துப் போதிக்கிறவராக இருப்பதற்கு" தானியேல் நமக்கு பல முறைகளில் ஒன்றாக இதை காண்பித்திருக்கிறார். (2தீமோத்தேயு 2:15)

பன்னிரெண்டு மாதங்கள், நேபுகாத்தேநச்சார் தானியேலின் ஆலோசனையைக் கேட்க முயன்றார். இறுதியில், அவரது பெருமை அவர் மேல் சிறப்பாக செயலாற்றியது. எவ்வாறாயினும், அவர் மீட்கப்பட்டவுடன், தேவனுடைய புரிதல் அவர் வழியாக பேச அனுமதிக்க தேவையான மனத்தாழ்மையை நேபுகாத்நேச்சார் பெற்றுகொண்டார். (தானியேல் 4:34- 37)

இன்றும் கூட, தேவனுடைய நன்மைக்காக ஜனங்களின் இருதயங்களைத் திறக்க தேவனுடைய புரிதல் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. தேவனுடைய இராஜ்யத்தில், நேபுகாத்நேச்சார் கற்றுக்கொண்டது போலவே, தேவனை எப்படி புகழ்வது என்று பில்லியன் கணக்கான ஜனங்கள் புரிந்துகொள்வார்கள் "புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கை யுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்." (1பேதுரு2:12)

தேவனுடைய புரிதல் நம் வாழ்வில் ஒரு போதும் முழுமையடையாது, ஆனால் அது ஒருபோதும் குறைவுள்ளதும் இல்லை. இது மனிதர்களின் இலட்சியப் படுத்தப்பட்ட கருத்தை விட உண்மையானதும், தூய்மையானதும் மற்றும் நேர்மையானதுமாகும். தெய்வீக புரிதல் என்பது தேவனுடைய கொள்கைகளின் குணங்கள் மற்றும் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஆகும். தேவனுடைய தரத்திற்கு தொடர்ந்து ஒத்துப்போகும் விருப்பத்துடன், அவற்றைக் கற்றுக்கொள்வதற்கும், நேசிப்பதற்கும், வாழ்வதற்கும் ஒரு தீவிர முயற்சி இதில் அடங்கும்.

"நீயும் போய் அந்தப்படியே செய்" (லூக்கா 10:37)

முத்துக்களைவிட சிறந்தது

# ஞானம்

"முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல....ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து, (நீதிமொழிகள் 8:11, 9:1)



*Micah Hess*

ஞானம் என்பது தெய்வீக அறிவு மற்றும் புரிதலின் திறமையான பயன்பாடாகும். யேகோவா தேவன் தம்முடைய எல்லையற்ற ஞானத்தினால், சாலொமோன் இராஜாவின் ஜெபத்திற்கு பதிலளித்து, அவரை பூமியின் மேல் சிறந்த ஞானியாக ஏற்படுத்தினார். பின்னர் இராஜாவாகிய சாலொமோன், தனது வரையறுக்கப்பட்ட ஞானத்தினால், யேகோவா தேவனிடமிருந்து கற்றுக் கொண்டதை நீதிமொழிகள் மற்றும் உன்னதப்பாட்டு என்ற புத்தகங்களில் பதிவு செய்தார்.

வெகுநாள் கழித்து, சுவிசேஷ யுகத்தின் போது, யேகோவா தேவன் தனது எல்லையற்ற ஞானத்தில், அவர்பால் ஈர்க்கப்படுவதற்கும், இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டதுப்போல், பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கும் நமக்கு வாய்ப்பளித்துள்ளார். கிறிஸ்துவுக்குள் அழியாமைக்குரிய வாய்ப்பு கிட்டத்தட்ட முடிவுக்கு வருவதாக தோன்றுகிறது, மேலும் இது சாலொமோன் இராஜாவின் அற்புதமான அனுபவத்தை விட மிகப் பெரிய மதிப்புடையதாகும்.

இராஜாவாகிய சாலொமோன் மற்றும் அப்போஸ்தலனாகிய பேதுருவும் சாலொமோனின் நீதிமொழியின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது : "ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து,

"(நீதிமொழிகள் 9:1) ஞானத்தின் வீடு என்றால் என்ன? இந்த ஏழு தூண்கள் யாவை?

அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு ஒரு பதிலை அளிக்கிறார், "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே (1) தைரியத்தையும், தைரியத்தோடே (2) ஞானத்தையும், ஞானத்தோடே (3) இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே (4) பொறுமையையும், பொறுமையோடே (5)தேவபக்தியையும்,தேவபக்தியோடே(6) சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே (7) அன்பையும் கூட்டி வழங்குங்கள்." (2பேதுரு1:5-7)

பேதுருவின் அறிவுறுத்தலைப் பின்பற்றவதற்கான தெய்வீக அறிவையும் புரிதலையும் எவ்வாறு திறமையாகப் பயன்படுத்துவது என்பதை சாலொமோன் இராஜா நமக்கு கற்பிக்கிறார்.

### தூண் 1 : நல்லொழுக்கம்

யேகோவா தேவன் நமக்காக ஏற்பாடு செய்திருந்த இயேசுவின் பலியின் முக்கியத்துவத்தை நாம் உணரும்போது யேகோவா தேவனை கனப்படுத்தவும், ஆராதிக்கவும் நம்முடைய இருதயம் ஏங்குகிறது. தேவனை ஆராதிக்கக் கூடிய வாழ்க்கையை, நல்லொழுக்கத்தோடு (சிறந்த ஒழுக்கமும் மற்றும் நீதியான வாழ்க்கை) தொடங்கும்படி பேதுரு நமக்கு அறிவுறுத்துகிறார். இது நமது கிறிஸ்தவ நடைக்கு அஸ்திபாரமாகும்.

"தேவனுக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்." (நீதிமொழிகள் 9:10) என்ற சாலொமோன் எழுதினார். இது அச்சத்தினால் வரும் பயம் அல்ல, மாறாக பயபக்தி, அடிபணிதல் மற்றும் கீழ்ப்படிதலினால் வரும் பயமாகும். யேகோவா தேவன் மேல் வைக்கும் பக்தியினால் ஞானம் தொடங்குகிறது. என்றும் மாறாத யேகோவா தேவனின் தன்மை மற்றும் ஞானம் நல்லொழுக்கத்திற்கு வழி நடத்தும் திசைகாட்டி ஆகும்.

"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான்." (நீதிமொழிகள் 13:20) இந்த கற்பனையை பவுலும் எடுத்துரைக்கிறார், "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்." (1கொரிந்தியர் 15:33) இது வாழ்க்கையின் விவரிக்க முடியாத உண்மையாகும். நம்மை சுற்றியுள்ள ஜனங்களும், அவர்களின் தாக்கங்களும் நமக்கு ஆழமாக பாதிப்புகளை ஏற்படுத்தும். ஆகவே நாம் நல்லொழுக்கம் என்ற குணத்தை வளர்ப்பதற்கு, இயேசுவின் பாதத்தண்டையில் பயில வேண்டும்.

### தூண் 2 : அறிவு

பெரும்பாலும் நாம் அறிவை விவிலிய புத்திக் கூர்மை மட்டுமே என்று நினைக்கிறோம். நம்முடைய இறையியலின் சிறந்த தன்மையை உறுதி செய்வதற்காக, அறுவடை செய்தியுடன் வேதாகமம் படிப்பதன் மூலம் அறிவைப் பெற முயற்சிக்கிறோம். இந்த வகை ஆய்வு முக்கியமானது என்றாலும், இது அறிவின் ஒரு பாதி மட்டுமே என்று சாலொமோன் சொல்கிறார்.

நீதிமொழிகளில் உள்ள அறிவு வெறுமனே ஆவிக்குரிய கோட்பாடாக மட்டுமே இராமல், ஆவிக்குரிய

பொருத்தமான பயன்பாட்டைக் கற்பிக்கிறது. வேத படிப்பு நீதியின் தரத்தை நமக்குக் கற்பிக்கிறது. ஆனால் அந்த தரத்தை நாம் பயன்படுத்துவதே, அறிவை நிறைவு செய்வதற்கான சோதனையாகும். இந்த அனுபவ அடிப்படையிலான கூறுகளை நல்லொழுக்கத்தின் அஸ்திபாரமான பண்புடன் சேர்க்கும்படி அப்போஸ்தலனாகிய பேதுரு வலியுருத்துகிறார்.

நல்லொழுக்கம் என்பது அறிவுக்கு நம்மை வழிநடத்தும் நீதியான திசைக் காட்டியாகும். "பரியாசக்காரனைத் தண்டிக்கும்போது பேதை ஞானமடைவான். ஞானவான் போதிக்கப்படும்போது அறிவடைவான்." (நீதிமொழிகள் 21:11) நல்லொழுக்கம் நம்மை திருத்தி வழிநடத்துகிறது."மூடனை நூறடி அடிப்பதைப்பார்க்கிலும், புத்திமானை வாயினால் கண்டிப்பதே அதிகமாய் உறைக்கும்." (நீதிமொழிகள் 17:10)

யேகோவா தேவன் பேசும்போது, நாம் கேட்கிறோமா ? நாம் ஒரு தவறான திருப்பத்தை எடுக்கும்போது, கற்பிக்கப்படத் தக்கவர்களாகவும், பணிவாகவும், நேர்மையாகவும் இருக்க கற்றுக் கொடுக்கிறார். நாம் யெகோவா தேவனின் அறிவுறுத்தலுக்கு செவிசாய்த்து நீதியின் பாதையில் திரும்புவோமா ?அறிவு என்பதற்கு சிந்திப்பதோடு, செயலும் அடங்கும்!

### தூண் 3 :இச்சையடக்கம்

இச்சையடக்கம் என்பது சுயத்தை கட்டுப் படுத்தல். நம்முடைய கிறிஸ்தவ நடைப் பயணத்தின் ஒவ்வொரு மூலையிலும் சுய கட்டுப்பாட்டை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டு. நமக்கு சுய கட்டுப்பாடு இல்லாத போது, வெளியில் இருந்து வரும் தாக்குதல்களுக்கு நம்மில் ஒரு பகுதியை, நாமே ஒப்புகொடுப்பவர்களாக இருப்போம் என்று சாலொமோன் இராஜா எச்சரிக்கிறார். "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான். "(நீதிமொழிகள் 25:28) சாலொமோனைப் போலவே, நாமும் தற்காலிகமான இன்பங்களை அனுபவிக்க அதிக நேரத்தை செலவிட்டால், நம்முடைய எதிரியின் தாக்குதல்களுக்கு நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் திறந்து வைக்கக் கூடியவர்களாக இருப்போம்.

நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் சுய கட்டுப்பாடும் மிக அவசியமானது. ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கும் நம்முடைய பரலோகத் தகப்பன் ஒரு கோட்பாட்டைப் படிக்கும்படி நம் இருதயத்தை வழி நடத்தும் போது, சில சமயங்களில் நம்முடைய வைராக்கியத்திலும் உற்சாகத்திலும் நம்முடைய கவனத்தையும் முயற்சியையும் அந்த குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுமே செலுத்துகிறோம்.

யேகோவா தேவனை மகிமைப்படுத்தவும், நம் சகோதரர்களை மேம்படுத்தவும், நம்முடைய ஊழியத்தை கட்டியெழுப்ப நாம் ஏங்குகிறோம். ஆனால் நம்முடைய ஊழியத்தை நிலையான வேகத்தில் கட்டியெழுப்ப வேண்டும். துரிதமாக செயல்படும் உணர்வு நல்லது, ஆனால் நம்முடைய ஆவிக்குரிய சக்தி அல்லது வல்லமை அனைத்தையும் விரைவாகப் பயன்படுத்திவிட கூடாது. ஆவிக்குரிய பொறுமை, ஒரு நிலையான வேகத்தில் நமக்கு முன் அமைக்கப்பட்ட வேலையை முடிக்க உதவுகிறது. "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்." (நீதிமொழிகள் 3:13)

நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி, ஊழியம் மற்றும் சாட்சிகளின் முயற்சிகளை ஒரு பொறுப்பான முறையில் தொடரவும் தன்னடக்கம் நமக்கு சொல்கிறது. சில நேரங்களில் நமது ஊழியம், நம்முடைய வாழ்க்கையில் மற்ற பகுதிகளில் சில பகுதிகளை பயன்படுத்த தூண்டலாம். ஆனால் யேகோவா தேவனுக்கு சேவை செய்வதற்கும், அவரை கனப்படுத்துவதற்கு நாம் ஏறெடுக்கும் முயற்சிகளில், நம் குடும்பத்தினரிடமிருந்தோ, எஜமானரிடமிருந்தோ நேரத்தை திருடிவிடக்கூடாது. ஞானத்தோடு சுய கட்டுபாடு, நம்மை இந்த சமநிலைக்கு வழிநடத்தும். "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்." (1தீமோத்தேயு 3:4)

### தூண் 4 : பொறுமை

உடனடியான மனநிறைவு என்ற நம்முடைய கலாச்சாரத்தில், நாம் பிரகாசிக்கக்கூடிய பிரகாசமான விளக்குகளில் ஒன்று நம்முடைய பொறுமை. யேகோவா தேவனின் தீமைக்கான அனுமதிப் பற்றியும், நம்முடைய சுய கட்டுப்பாட்டை பற்றியும் சரியான அறிவோடு, மீட்புக்காக நீடிய பொறுமையுடனும், சாந்தத்துடனும் நாம் காத்திருக்கும் போது, ஆழ்ந்த, தீர்க்கமான விசுவாசத்திலிருந்து வரும் ஒருவிதமான பொறுமை நமக்குள் உருவாகிறது. "அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்." (நீதிமொழிகள் 17:27) என்று சாலொமோன் நமக்கு கற்பிக்கிறார்.

நம்முடைய கலாச்சாரமும் விரைவான நாவுக்கு வெகுமதி அளிக்கிறது. நம்முடைய மூளை நம்

எண்ணங்களைச் செயலாக்க அனுமதிப்பதற்கு முன்பு, நம்முடைய வார்த்தைகள் ஈடுபடுவதே நமக்கு சோதனையாகும். ஞானத்தோடு பொறுமை, நம் கருத்தை குரல் கொடுப்பதற்கு முன் விஷயங்களை பரிசீலிக்க கற்றுக்கொடுக்கிறது. அத்தகையை இடைநிறுத்தம் நமது புது சிருஷ்டி, சூழ்நிலையை மதிப்பிடுவதற்கும், அதை ஜெபத்தோடு சிந்திப்பதற்கும் நேரத்தை வழங்குகிறது. நம்முடைய சொற்களையும் செயல்களையும் உருவாக்குவதற்காக பயன்படுத்தப்படும் நீதியில் தரம், செயல்படும் போது, அது ஒரு அற்புதமான நடவடிக்கையாக உள்ளது. "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்." (எபேசியர் 5:9-10)

### தூண் 5 : தெய்வபக்தி

தெய்வபக்தி என்பது கனத்திற்குரிய பக்தியின் தீவிர உணர்வாகும். சுவிசேஷத்தின் மேல் நாம் கொண்டுள்ள அன்பையும், மரியாதையையும், நம்முடைய சொல்லினாலும், செயலினாலும், அனைவரிடமும் வெளிப்படுத்த வேண்டும் என்று பேதுரு அறிவுறுத்துகிறார். இராஜாவாகிய சாலொமோன், நம்முடைய விசுவாசத்தின் ஆரம்பத்திலேயே பயபக்தியை முன் வைக்கிறார். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு."(நீதிமொழிகள் 9:10)

சாலொமோன் பயத்திற்கு சரியான எபிரெய வார்த்தையை பயன்படுத்துகிறார். (yir'ah, Strong's 3374) இது பயபக்தி, அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் மற்றும் மரியாதை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. "கர்த்தரிடத்தில் மகா பயபக்தி கொள்ளுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று இந்த வசனத்தை நாம் வாசிக்கலாம்.

தெய்வபக்தி கிறிஸ்தவ வாழ்க்கையின் தூணாகும். யேகோவா தேவனுக்கும் அவருடைய நீதியுள்ள கொள்கைகளையும் மதிக்காமல், கிறிஸ்தவ கிருபை மற்றும் அறிவின் அடிப்படையான காரியங்களிலிருந்து நாம் என்றுமே முன்னேற முடியாது.

யேகோவா தேவனிடம் ஆழ்ந்த பயபக்தியை வளர்ப்பதற்கான உறுதியான வழி, எல்லா மனிதர்களுக்கும் யேகோவா தேவனின் தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய முழுமையான புரிதலுடன் தொடங்குகிறது. யேகோவா தேவனுடைய பண்புகளுடன் பொருந்தக்கூடிய ஒரு நியாயமான மற்றும் அன்பான திட்டத்தை அவர் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும்போது, அவருடைய இருதயம், அவருடைய நோக்கங்கள் மற்றும் அவருடைய கிருபையான இரக்கமுள்ள தன்மை ஆகியவற்றைப் பற்றிய கம்பீரமான பார்வையை நமக்கு வழங்குகிறது.

தற்போதைய தீய உலகில், நம்முடைய விசுவாசத்தின் நிலைகள், உலகக் கருத்துக்களினால் மங்கலாகின்றன. மரியாதைக்குரிய பக்தியின் சரியான கட்டமைப்பானது ஒரு தெய்வீக விசுவாசம் மற்றும் இரக்கம், சத்தியம், தாழ்மை, விடாமுயற்சி, நேர்மை, தெளிந்த புத்தி மற்றும் இன்னும் பல நன்மைக்குரிய வாழ்க்கைக்கு முக்கியமான ஆரம்பமாகும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் இரக்கம் மற்றும் சத்தியத்தின் தெய்வீக நற்பண்புகளை நாம் கடைப்பிடிக்கும்போது, நாம் இந்த உலகிற்கு யேகோவா தேவனின் தூதர்களாக இருப்போம் என்று சாலொமோன் இராஜாநமக்குக் கற்பிக்கிறார். "கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்." (நீதிமொழிகள் 3:3-4)

### தூண் 6 : சகோதர அன்பு

அர்ப்பணிக்கப்பட்ட குறுகிய பாதையில், நமக்கு உதவும்படிக்கு, யேகோவா தேவன் ஞானமாக சபையின் ஒழுங்குகளை ஏற்பாடுச் செய்திருக்கிறார். அங்கு சத்தியம் கற்பிக்கப்பட்டு, ஆதரிக்கும் இடமாகவும், விசுவசாத்தின் விதைகள் வேரூன்றச் செய்வதற்கான நல்ல நிலமாக, இருதயங்கள் வளர்க்கப்படுவதற்கான இடமாகவும் நிறுவினார். "தாமதிப் பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது."(1 தீமோத்தேயு 3:15)

பவுல் சபையில் சகோதர அன்பை வலியுறுத்துகிறார். "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;" (எபிரெயர் 10:24) அவர் தனது ஆவிக்குரிய குமாரனாகிய தீமோத்தேயுவினிடம் நிரூபித்ததைப் போல, சகோதர சிநேகமானது, சகோதாரர்களின் பரிசுகள், தேவைகள், பலங்கள் மற்றும் நீதியை வளர்ப்பதில் முனைப்புடன் செயல்படுவதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள நம்மைத் தூண்டும். இப்படியாக நமது சகோதரர்களிடம் நாம் கவனமாக முதலீடு செய்யும்போது, அவர்களின் புதிய சிருஷ்டிகளுக்கு நமது முதலீடு வழங்கும் உதவி சக்திவாய்ந்ததாகவும் அவர்கள் மறுரூபமாக தக்கதாகவும் இருக்கம்.

"சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்." (நீதிமொழிகள் 17:17) என்று இராஜாவாகிய சாலொமோன் கற்பிக்கிறார். இந்த அறிவுரைக்கு அவர் நிஜ உலக நடைமுறைகளை சேர்க்கிறார். நம்முடைய சபையைக்

குறித்து நினைக்கும் போது, நாம் எப்போதும் அன்பாக இருக்கிறோமா ? எதிரான காலங்களில், நாம் ஒரு குடும்பத்தைப் போல ஒன்றாக வருகிறோமா ? நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தை கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதியாக இருப்பது மிகப் பெரிய நன்மைகளில் ஒன்றாக நாம் பார்க்கிறோமா? சில சமயங்களில் யேகோவா தேவனை பின்பற்றுவதற்கான நம்முடைய அவசரத்தில், சகோதர இரக்கம் போன்ற எளிமையான விஷயங்கள் விடப்படுகிறது.

சகோதரர்கள் போராடுகிற போது அல்லது கலக்கமடையும் போது, அவர்களுக்கு உதவும்படியாக நமக்குள் இருக்கும் சகோதர சிநேகம் நம்மை தூண்டுகிறது. சகோதர சிநேகத்தை முதலாவது நம்முடைய இருதயங்களிலும், பின்னர் நமது சபையிலும், வளர்த்துக்கொள்வது, நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், நம்முடைய சகோதரர்களின் நிலையான வளர்ச்சிக்கும் மிக முக்கியமானது.

### தூண் 7 : அன்பு

தூய்மையான வடிவத்தில் உள்ள அன்பே (அகாபே), ஞானத்தின் வீட்டில் பேதுருவின் இறுதி தூணாகும். பரிபூரண அன்பின் அடையாளத்தை அடைவதற்கு முந்தைய ஆறு தூண்களின் தேர்ச்சி தேவை. அகாபே அன்பு என்பது கடமைக்கு கட்டுப்பட்ட பொறுப்புக்கும் அப்பால் அல்லது தாண்டிச் செல்கிறது. அகாபே அன்பு சுத்தமானதும், உருக்கமானதுமாக உள்ளது. இதுவே நம்முடைய விசுவாசத்தோடு இறுதியாக சேர்க்கப்படவேண்டியது ஆனால் இது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல.

சுயநலமற்ற அன்பை உள்ளடக்கிய விசுவாசத்தை வைத்திருப்பது ஏன் மிகவும் முக்கியம் என்று சாலொமோன் இராஜா நமக்கு சொல்கிறார். "பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்." (நீதிமொழிகள் 10:12) எல்லா மீறுதல்களுக்கும், அன்பு மட்டுமே தீர்வு என்பதை அவர் நமக்குக் கற்பிக்கிறார்.

அன்பின் செயல்பாட்டில், விவேகத்தின் முக்கியத்துவத்தையும் அவர் கற்பிக்கிறார். "குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான்; கேட்டதைச் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான்." (நீதிமொழிகள் 17:9) இங்கு சாலொமோன் பயன்படுத்தும் வார்த்தை, கிரேக்க புதிய ஏற்பாட்டில், அகாபே அன்புக்கு சமமான எபிரேய வார்த்தையாகும்.

நாம் வெறுமனே பாவத்தை கவனியாமல் விட்டுவிட முடியாது என்பதை யேகோவா தேவன் பாவ நிவிர்த்திக்கான மகத்தான வேலையில், அவர் நமக்கு முன் வைத்த மாதிரியின் வழியாக கற்பிக்கிறார். யேகோவா தேவன் இந்த உலகத்தை நேசிப்பதால் மட்டுமல்ல, அவருடைய நீதியின் தெய்வீக கொள்கையையும் நிறைவேற்றுதற்காகவும், அவருடைய ஒரேபேறான குமாரனை இந்த உலகத்தை இரட்சிக்க அனுப்பினார். இவ்வாறாக, யேகோவா தேவன் தனது ஒப்புரவாக்குதலின் திட்டத்தில், அகாபே அன்பு எல்லா மீறுதல்களையும் மூடுகிறதை காட்டுகிறார்.

### முடிவுரை

பேதுருவின் வசீகரமான அறிவுரையிலிருந்தும், நீதிமொழிகளின் புத்தகத்தில் உள்ள ஞானத்திலிருந்தும், ஒரு சீரான கிறிஸ்தவ வாழ்க்கையின் அடித்தளத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான ஏழு தூண்கள் நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கொள்கையும் முக்கியமானது. மேலும் இதற்கு சரியான வளர்ச்சியும் பராமரிப்பும் அவசியமாக தேவைப்படுகிறது. தூண்களின் வரிசை "சேர்த்தல்" அடிப்படையில் உள்ளது, இதில் ஒவ்வொன்றும் நமது விசுவாசத்தின் சுமை தாங்கும் கட்டமைப்பை ஆதரிப்பதில் அதிகமான பங்கைக் கொண்டுள்ளது. ஆவிக்குரிய மன அழுத்தத்தையும் சோர்வையும் தடுக்க ஏழு தூண்களும் நமக்குத் தேவை. நம்முடைய குடும்பம், சகாக்கள் மற்றும் நம்முடைய சகோதரர்களுடன் தொடர்பு கொள்ளும்போது நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்கள், நம்முடைய விசுவாசத்தின் இந்த ஏழு தூண்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கான நிரூபணத்தை வழங்கும்.

விசுவாசத்தின் இந்த அடித்தள பண்புகளை வளர்க்க நாம் முயற்சிக்கும்போது, "நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு."(நீதிமொழிகள் 3:7)என்பதை நாம் நினைவில் கொள்வது ஞானமாக இருக்கும்.

சாலொமோனின் இரண்டு பகுதி வாழ்க்கை - கீழ்ப்படிதலைத் தொடர்ந்து கீழ்ப்படியாமை - நாம் அடைந்துவிட்டோம் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம் என்றும், யேகோவா தேவனின் திட்டத்தில் நம்முடைய இடத்தை தாழ்மையுடன் நினைவில் கொள்ளவும் கற்றுக்கொடுக்கிறது. அறிவிலும் ஞானத்திலும் நமது முன்னேற்றத்தோடு இணைந்து வரும் பெருமைக்கான சோதனையைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆரோக்கியமான பயபக்தியும், யேகோவா தேவனை நம்பியிருப்பதும், பரம அழைப்பின் பந்தய பொருளை நோக்கி நம்மை வழிநடத்தும்,

சாலொமோன் இராஜாவின் வார்த்தைகள் மூலம் நாம் தெய்வீக ஞானத்தைக் கற்றுக்கொள்கிறோம் "விரும்பத்தக்க அனைத்து காரியங்களையும் விட" ஞானமே (தெய்வீக அறிவு மற்றும் புரிதலின் திறமையான பயன்பாடு) சிறந்தது என்பதற்கான சான்றாக அவைகளை நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிப்போம்.

## எளியவர்களுக்கான நுணுக்கம்

# விவேகம் ஞானத்தின் செயல்பாடு

"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்." (நீதிமொழிகள் 1:4)



**Nathan Kaleta**

ஞானம் நீதி, தீர்ப்பு மற்றும் சமத்துவம் ஆகிய நான்கு குணங்களும் நீதிமொழிகள் புத்தகத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. (நீதிமொழிகள் 1:3) சாலொமோன் இராஜா தேவனிடத்தில் கற்றுக்கொண்ட, சத்தியத்தின் நான்கு முக்கியமான பிரிவுகளை unassailable categories, நமக்கு விவரிக்கிறார். தெய்வீக வாழ்க்கை வாழ்வதற்கு இவைகள் முக்கியமான உட்பொருட்கள். ஆனால் ஒருவரின் வாழ்க்கையிலும், நேசிக்கப் பட்டவர்களின் வாழ்க்கையிலும் சரியான பலன் பெறுவதற்கும் இந்த குணங்களை கடைபிடிக்கப்பட வேண்டும். இந்த முறையில் செயல்படுத்தும் மூலப் பொருள் விவேகம். விவேகம், அறிவு மற்றும் ஞானத்தின் செயல்பாடாகும்.

தவறுகளிலிருந்து சரியானதைப் புரிந்து கொள்வதற்கும், சம்மந்தப்பட்ட விஷயங்களின் முக்கியத்துவங்களை அறிந்து, பின்னர் சரியான முறையில் செயல்படும் வளர்ச்சி அடைந்த திறனே விவேகம். முதலாவதாக அவருடைய ஆட்சியின் ஏறக்குறைய இருபது ஆண்டுகள், தெய்வீக விவேகம் ஞானமுள்ள சாலொமோன் இராஜாவின் இருதயத்தை ஆட்சி செய்தது. நீதிமொழிகள் 1:4ல் சாலொமோன் மெசிம்மா (mezimmah) என்ற எபிரெய வார்த்தையை பயன்படுத்துகிறார். இதை "சிந்தனைத்திறன்" என்றும் மொழிபெயர்க்கலாம். ஞானமாகவும், பாரபட்சம் இல்லாமல் தீர்ப்பளிப்பதே இதன் பொருளாகும். சாலொமோன் இராஜாவின் வாழ்க்கையின் சாட்சியத்தை அவருடைய வார்த்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும், அவை ஒத்துப்போகிறதா என்பதைப் பார்க்க நம்முடைய சொந்த விவேகத்தை பயன்படுத்தவும் நமக்கு வாய்ப்புள்ளது.

### விவேகத்துடன் ஞானம்

சாலொமோன் தேவனிடமிருந்து அவருடைய ஞானத்தின் பரிசைப் பெற்றார். சாலொமோனின் ஞானம், புரிதல் மற்றும் அவரது மனதில் ஆழம் கடற்கரையின் மணல் போல இருந்தது. (1இராஜாக்கள் 4:29) அந்த பரிசைப் பெற்றதன் விளைவாக, அவர் சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துவதற்கு தூண்டப்பட்டார். (1இராஜாக்கள் 3:15)அவர் தேவனிடமிருந்து பெற்ற ஞானமான மற்றும் விவேகமான மனதின் உடனடியான செயல்பாட்டை காணலாம். நன்றிகளை ஏறெடுப்பதே அவரது முதல் செயலாகும். சாலொமோனின் நேர்மையான ஜெபத்தில், அவர் தேவன் மேல் வைத்த அன்பை நாம் கவனிக்கலாம்.

நீதிமொழிகள் மற்றும் உன்னதப்பாட்டின் புத்தகங்களிலும் இராஜாவாகிய சாலொமோனின் ஞானத்தைப் பற்றிய பதிவு, தேவன் அவருக்கு தந்த பரிசின் தொடர்ச்சியான நினைவுச் சின்னமாகும். சாலொமோன் எழுதிய நீதிமொழிகள் மற்றும் பாடல்களின் எண்ணிக்கை வியக்க வைக்கிறது. "அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுக்கள் ஆயிரத்து ஐந்து." (1இராஜாக்கள் 4:32) அவருடைய எழுத்துக்கள் மூலம், அவருக்குப் பின், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழக்கூடிய தேவ ஜனங்களுக்கு பணியாற்றினார். நாம் நித்தம் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு வழிகாட்டியாக, சாலொமோன் இராஜாவின் ஞானம் நமக்காக பதிவு செய்யப்பட்டதற்கு நாம் பாக்கியவான்களாக இருக்கிறோம்.

நீதிமொழியின் புத்தகத்தில் முழுவதிலும் இராஜாவாகிய சாலொமோனின் ஞானத்தில் அவருடைய விசுவாசத்தை நாம் கவனிக்கலாம். குறிப்பாக ஒரு சந்தர்ப்பத்தில், உடன்படிக்கைப் பெட்டி ஆலயத்திற்குள் கொண்டுவரப்பட்டபோது, ஆலயத்தை கட்டி முடிக்கவும், அவருடைய தந்தையாகிய தாவீதின் கனவை நிறைவேற்ற உதவிய தேவன் மேல் வைத்த நம்பிக்கையையும், விசுவாசத்தையும் காணலாம். சாலொமோன் இராஜா அவருடைய கைகளை பரலோகத்தை நோக்கி விரித்து, ஒரு அருமையான ஜெபத்தை ஏறெடுத்தார். (1இராஜாக்கள் 8:22-53)பின்னர், தேவன் தம்முடைய வாக்குறுதிகளைக் காத்துக் கொள்வதாகவும், அவருடைய ஜனங்களுக்கு ஓய்வு கொடுப்பதாகவும் அவர் இஸ்ரயேல் ஜனங்களுக்கு அறிவித்தார். (1இராஜாக்கள் 8:54-61) கர்த்தரை "அறிந்துகொள்ளவும்" அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் இஸ்ரயேலர்களை அவர் வலியுறுத்தினார். நேரில் காண்பதற்கு இது ஒரு எழுச்சியூட்டும் நிகழ்வாக இருந்திருக்க வேண்டும்.

சாலொமோன் இராஜாவுக்கு ஞானத்தோடு விவேகம் இருந்தபோதிலும், அவர் எப்போதும் அவற்றை நேர்மையான நோக்கங்களுக்கு பயன்படுத்த வில்லை. பிற்காலத்தில் அவருடைய வாழ்க்கையில், அவருடைய பல மனைவிகள் அவருடைய இருதயத்தை

தேவனிடமிருந்து எளிதில் விலக செய்தார்கள். ஒருவேளை சாலொமோன் இராஜாவின் மாம்ச இச்சைகள், தேவனுக்குரிய கீழ்ப்படிதலை புறக்கணித்திருக்கக் கூடும். அவருடைய மனைவிகள் மற்ற தெய்வங்களை வணங்கினாலும், அவர்களது கண்களில் இரக்கம் பெற விரும்பியதால் இவ்வாறு அவர் நடந்திருக்கலாம். (1இராஜாக்கள் 11:1-14) (ஒருவேளை, அவருடைய மனைவிகள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, அவரை திணறடித்தபோது, சாலொமோன் சமாதானத்தை விரும்பியிருக்கலாம்!) இந்த ஞானம் விவேகத்துடன் செயல்படுத்தப்பட்டிருந்தால், சாலொமோன் இராஜா இவ்வளவு மோசமான பாவத்தை செய்திருக்க மாட்டார். அவர் சிறந்த தேர்வுகளை செய்திருப்பார்.

### விவேகத்துடன் நீதி

சாலொமோன் இராஜாவுக்கு தேவன் பரிசாக தந்த அவருடைய ஞானத்தைப் பற்றி இஸ்ரயேலுக்கு வெளியிலும் கூட பரவியது. இது அறியப்பட்டு உலகம் முழுவதும் பிரசித்தமானது. சாலொமோனின் திறமைகளும், நீதியை நிறைவேற்றுவதில் அவருடைய விநோதமான திறமைகளும் சேபா நாட்டு ராஜஸ்திரீயின் காதுகளை எட்டியது.

அவள் தன் கண்களால் பார்க்கவும், கடினமான கேள்விகளால் அவரை சோதிக்கவும் இஸ்ரயேலுக்கு வந்தாள். (1இராஜாக்கள் 10:1)சாலொமோன் இராஜாவைப் பற்றி அவள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை என்று அவள் விரைவில் உணர்ந்தாள். சாலொமோன் இராஜாவின் ஊழியர்கள் நியாயமாகவும் நீதியாகவும் நடத்தப்பட்டதால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை அவள் கண்டாள். (1இராஜாக்கள்10:8) உண்மையில், தேவனுடைய ஜனங்களிடையே நீதியையும், நியாயத்தையும் சரியாக நிறைவேற்றுவதற்காக கர்த்தர் சாலொமோனை இராஜாவாக்கினார்.(1இராஜாக்கள் 10:9)

"நியாயந்தீர்ப்பது நீதிமானுக்குச் சந்தோஷமும், அக்கிரமக்காரருக்கோ அழிவுமாம்." (நீதிமொழிகள் 21:15) என்று நீதியைப் பற்றிய ஒரு அழகான பழமொழி கூறப்படுகிறது. கவனமான தீர்ப்பினால், அக்கிரமத்தைத் தடுக்க முடியும், இது சரியான முடிவுகளை எடுக்க உதவுகிறது.

ஆரம்பகால கற்றல் ஒரு முக்கிய காரணியாகும். சாலொமோன் தனது விருப்பத்தினை இளைஞர்களுக்கான விவேகத்திற்கு நேராக வழிநடத்துகிறார். பொதுவாக ஒரு இளைஞன் மிகவும் ஆற்றல் மிக்கவரும், வைராக்கிய முள்ளவராக இருப்பார். ஒருவேளை 20 வது வயது வரையில் மனித மூளை முழுமையாக வளர்ச்சியடையாது என்பதை சாலொமோன் இராஜா அறிந்திருக்கலாம். ஒரு வளர்ச்சியடையாத மனித மூளை, (குறிப்பாக 13-20 வயதுள்ள இளைஞர்கள்) அவசர முடிவுகளை எடுக்க வழிவகுக்கும் என்று இன்றைய, விஞ்ஞானம் கூறுகிறது. இது தீங்கை விளைவிக்கலாம் மேலும் நீண்ட காலத்திற்கு அதன் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

### விவேகத்துடன் தீர்ப்பு

தேவ ஜனங்களை ஞானத்தோடு நியாயந்தீர்ப்பதற்கு சாலொமோன் தம்முடைய ஞானமாகிய பரிசை பயன்படுத்த விரும்பினார். ஜெபத்தின் வழியாக அவர் தனது பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு சரியான கருவிகளை கேட்டார். நன்மை மற்றும் தீமையைக் கண்டறியும் திறனே அவர் பெற்ற கருவிகளில் ஒன்றாகும். (1இராஜாக்கள்3:9) குறிப்பாக அவரது ஆட்சியின் முதல் 20 ஆண்டுகளில், அவர் நல்ல தீர்ப்பளிப்பதில் திறமையானவரானார்.

ஒரு குழந்தையின் மகப்பேறு குறித்து வாதிட்ட இரண்டு வேசிகளின் கதையில், சாலொமோன் பயன்படுத்திட்ட விவேகம் ஒரு முக்கிய உதாரணமாக உள்ளது. சூழ்நிலையை ஆராய்ந்த பிறகு, குழந்தையின் தாயின் அடையாளத்தை சாலொமோன் சரியாக தீர்மானிக்க முடிந்தது. அவருடைய தீர்ப்பும், விவேகமும் பிரபலமானது: "நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்." (1இராஜாக்கள் 3:28)

இருப்பினும், சாலொமோனின் தீர்ப்பு எப்போதும் தெய்வீக விவேகத்தால் வழிநடத்தப்படவில்லை, இது பேரழிவான பாவத்திற்கு அவரை வழிவகுத்தது. சாலொமோன் இராஜா மற்றும் தாவீது இராஜா இருவரும் பாவத்தின் வஞ்சகத்திற்கு எதிராக தங்களைக் காத்திருக்கக் கூடிய ஒரு வழியை அப்போஸ்தலன் பவுல் அறிவுறுத்துகிறார். "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள" (எபிரெயர் 3:13)

நம்முடைய தவறுகளை கவனித்து, ஜெபத்தினாலும், தேவனுடனும், அவருடைய வல்லமையுள்ள வார்த்தையினாலும் அவைகளை சரிசெய்து கொள்வது நமது கடமை என்று இந்த வசனத்தைப் பற்றி பாஸ்டர் ரசல் அவருடைய கருத்தைத் தெரிவித்தார். (மார்ச்10, மன்னா)

### விவேகத்துடன் சமத்துவம்

நீதிமொழிகள் புத்தகத்தின் நான்கு நிலையான தூண்களில் கடைசி - சமத்துவம். இது நியாயமான மற்றும் நடுநிலை தவறாத தன்மையின் தரமாகும். தேவனுக்கு ஒரு வீட்டைக் கட்டுவதற்கு பொருத்தமான வேலைக்காரர் களைக் கண்டுபிடிக்கும் பணிக்கு அவர் தகுதியானவர்

அல்ல என்பதை சாலொமோன் அறிந்திருந்தார். இது அவருடைய அற்புதமான கம்பீரத்தை உயர்த்தியது. "வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக் கூடாதிருக்க, அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? அவர் சந்நிதியில் தூபங்காட்டு கிறதற்கேஒழிய, வேறே முகாந்தரமாய் அவருக்கு ஆலயம்கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?" (2நாளாகமம் 2:6)

சாலொமோன் இராஜாவின் வார்த்தைகள் அருமையானவை." அப்பொழுது நீதியையும், நியாயத்தையும், நிதானத்தையும், சகல நல் வழிகளையும் அறிந்துகொள்ளுவாய். ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும் போது,நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்." (நீதிமொழிகள் 2:9-11)

"ஒவ்வொரு நல்ல பாதைக்கும்" சாலொமோன் இராஜாவின் முதன்மையான உதாரணம், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசனாகிய, அவரது தந்தையாகிய தாவீது ஆவார். தேவன் சாலொமோனை ஒருபோதும் விட்டுவிடவும் மாட்டார், அவரை கைவிடவும் மாட்டார் என்பதால், தாவீது தன் மகனை வலிமையாகவும், தைரியமாகவும் அச்சமின்றி இருக்கவும் அறிவுறுத்தினார். (1நாளாகமம் 28:20) ஒருவேளை தாவீது தன்னுடைய பாவத்தின் சொந்த அனுபவத்திலிருந்தும் நம்மிடம் பேசியிருக்கலாம். சரியானதை தவறிலிருந்து வேறுபடுத்துவதற்கு, ஒரு இளைஞன், அதாவது அனுபவமற்ற நபருக்கு, பெரும்பாலும் வயதான மற்றும் ஞானமுள்ள ஒருவரின் (ஒரு நல்ல வழிகாட்டி) ஆலோசனை தேவைப்படுகிறது. தங்களுக்கு ஆலோசனை தேவை என்பதை ஒருவர் ஒப்புக்கொள்வது பெரும்பாலும் கடினமாது, மேலும் ஆலோசனையை கேட்பது அதைவிட கடினமானது. ஆகவே ஒருவரின் ஆலோசனையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்வது, அதற்கு மேல் ஒரு படியாகும். விவேகம் தேவைப்படும் தருணம் இதுவே, ஆலோசனை கேட்க, புரிந்துகொள்ள மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறனாகும்.

## பேரழிவுக்கான ஒரு செய்முறை

விவேகத்தின் பற்றாக்குறை பேரழிவுக்கான செய்முறையை உருவாக்குகிறது. சரியான செயல்படுத்தல் இல்லாமல், ஞானமும், அறிவும் சரியாக பயன்படாமல் போய்விடும் அல்லது செயலற்றதாக, விரைவில் சிதைந்துவிடும். சாலொமோனின் கட்டளைகளில் காணப்படுவது போல, ஞானமும் அறிவும் முறையற்ற முறையில் பயன்படுத்தப்படுத்தும்போது, தேவ ஆராதனையை அதிகரிப்பதை விட்டு விட்டு மாம்சத்தை போஷிக்கும். "மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்திக்குச் சமானம்." (நீதிமொழிகள் 11:22) வெளிபுறத்தில் மட்டும் அழகாக இருக்கும் ஒரு ஸ்திரீ பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம். விவேகமில்லாமல், தேவன் நமக்கு கொடுத்த மேற்புறமான அழகுக்கு எந்த மதிப்பும் இல்லை.

பெண்களின் அழகு சாலொமோனை சோதனையில் ஆழ்த்தியது. அவர் ஏன் தோல்வியடைந்தார்? பிரசங்கியின் புத்தகம் அவருடைய குழப்பமான மனதைப் பற்றிய சில நுண்ணறிவை நமக்குத் தருகிறார். "வெள்ளியையும் பொன்னையும், ராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தேன்; சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன். எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடேகூட இருந்தது.என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்க வில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன்.என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை." (பிரசங்கி 2:8-11)

அதே துன்பம் அவரது தந்தை தாவீது இராஜாவையும் பாதித்தது. "தன் காரியங்களை நியாயமாக நடப்பிக்கிறவர்" (சங்கீதம் 112:5) என்ற ஒரு நல்ல மனிதனாக தாவீது சாட்சி பெற்றிருந்தபோதிலும், பத்சேபாளின் விவகாரத்தில் காணப்பட்டபடி, அவர் தனது சொந்த ஆலோசனையையும் கூட கவனிக்கவில்லை. தாவீதிடம் விவேகம் இல்லாததால் அவர் விபச்சாரம் செய்து, உரியாவை கொலைச் செய்ய திட்டமிட்டார். இந்த செயல்களின் விளைவுகள் பயங்கரமானதும், வாழ்க்கையை மாற்றக்கூடிய தாகவும் இருந்தது.

## முடிவுரை

நம்முடைய பரலோகத் தகப்பனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ்வதற்கான முக்கிய கூறுகளில் ஒன்று விவேகம். விவேகம் ஒரு "சீராக்கி" regulator" போன்றது, அது நம் இருதயத்தை ஆட்கொள்வதற்கு நாம் பயன்படுத்தவேண்டும் என்று சாலொமோன் கூறுகிறார். "என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; மெய்ஞ்ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள்." (நீதிமொழிகள் 3:21) "சிறந்த ஞானமும், விவேகமும் நித்திய ஜீவனுக்கான வழியை மட்டுமல்ல, தற்போதைய காலத்தில் கூட அவைகள் கிருபையையும், தேவ தயவையும் நமக்கு

தந்து, பயத்திலிருந்தும், தடுமாற்றத்திலிருந்தும் நம்மைக் காக்கின்றது" என்று பாஸ்டர் ரசல் எழுதினார். (R1520).

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் விவேகம் மிக முக்கியம். எத்தனை முறை "ஆம்" என்றும், "இல்லை" போதாது என்றும் நாம் அடிக்கடி சொல்லியிருக்கிறோம். உலகம் பாவத்திற்கு "ஆம்" என்று சொல்ல விரும்புகிறது, ஏனெனில் அது மகிழ்ச்சியைத் தரும். சாலொமோன் அடிக்கடி, "ஆம்" என்று சொன்னார். இதன் விளைவாக, அவருடைய செயல்கள், "என்ன செய்யக்கூடாது" என்று நமக்குச் சொல்கின்றன, அதே நேரத்தில் அவருடைய வார்த்தைகள் "என்ன செய்ய வேண்டும்" என்பதை அறிந்துகொள்வதற்கு ஞானம் அளிக்கிறது.

ஆயினும்கூட, ஆரம்பத்தில், சாலொமோன் இராஜா ஒரு சிறந்த தலைவராகவும், புகழ்பெற்ற இராஜாவாகவும் இருந்தார். தேவனை பிரியப்படுத்துவதற்கு, அவர் எடுத்த முயற்சிகளை தேவன் மதித்தார். சாலொமோன் இராஜா கட்டிய ஆலயத்திற்கு தேவன் அவருடைய பரிசுத்தத்தை கொண்டு வந்தார். மேலும் சாலொமோன் இராஜாவையும் அவருடைய தந்தையாகிய தாவீது இராஜாவையும் அற்புதமான தலைவர்களாக தேவன் உறுதிப்படுத்தினார். (1 நாளாகமம் 29:25, 2 நாளாகமம் 5:13-14)

சாலொமோன் இராஜாவிற்கும், இஸ்ரயேல் ஜனங்கள் அனைவருக்கும், நல்ல விவேகம், அறிவையும் ஞானத்தையும் செயல்படுத்தியது. தேவனுடைய ஞானம், நீதி, தீர்ப்பு மற்றும் சமத்துவத்தின் கொள்கைகளை இராஜாவாகிய சாலொமோன் பிரதிபலிப்பதன் மூலம், அவர் தனது ஜனங்களை ஊக்குவித்தார். இதேபோல நாமும் இந்த வேலையை விடாமுயற்சியுடன் செய்வோம்!

நியாயத்தீர்ப்பின் வழிமுறை

# வார்த்தைகளை உணருதல்



*Timothy Malinowski*

"இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து,விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்." (நீதிமொழிகள் 1:2-3)

கார்னெல் பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டின் ஒரு ஆய்வு, சராசரி வயது வந்தோர், ஒவ்வொரு நாளும் சுமார் 35,000 தனிமையான உணர்வோடு முடிவுகளை எடுப்பதாக மதிப்பிடுகிறது. ஒவ்வொரு முடிவுக்கும், நிச்சயமாக அதன் விளைவுகள் (நல்லது அல்லது கெட்டது) உள்ளது.

அதேபோல், நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவிலும், நல்லது அல்லது மோசமான தீர்ப்பைப் பயன்படுத்தலாம். நியாயத்தீர்ப்பின் மனத்திறன் என்பது நம் வார்த்தைகளால் வழிநடத்தப்படுவதற்கு முன், நம் கைகளால் செயல் படுவதற்கு அல்லது நம் கால்களால் நகரும் முன் நம் எண்ணங்களின் இறுதி ஏற்படும் ("வடிகட்டப்பட்ட") சிந்தனையாகும். நம் வாழ்வில், தீர்ப்பு - ஒரு சிலாக்கியமும், பொறுப்புமாகும். இதன் மூலம் நம் வாழ்க்கையை நடத்துவது ஒரு பாக்கியம், அதை நம் குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு கற்பிப்பது ஒரு பொறுப்பு. தெய்வீக தீர்ப்பை நாம் பயன்படுத்துவதன் மூலம் "நம்முடைய ஒளியை பிரகாசிக்கிறோம்."

தீர்ப்பை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் நம்முடைய குடும்பங்களை நீதியுடன் நிலைநிறுத்து கிறோம் என்று சாலொமோன் இராஜா தனது வாழ்க்கையின் உதாரணத்தால் நமக்கு காட்டினார். தீர்ப்பு ஒரு அடித்தளமாக, நல்ல செல்வாக்கையும் சக்தியையும் கொண்டு, ஒவ்வொரு நல்ல வேலைக்கும் வழிவகுக்கிறது. பிற்கால வாழ்க்கையில், சாலொமோன் அவரின் மோசமான தீர்ப்பைப் பயன்படுத்தியது போல, நாமும் தேவபக்தியற்ற தீர்ப்பை பயன்படுத்தினால் தேவனுடைய தயவிலிருந்து விழுந்துபோவோம் என்பதைக் காட்டுகிறது.

நாம் வெற்றிபெற வேண்டும் என்று சாலொமோன் இராஜா விரும்பினார். நம்முடைய இருதயம், தயவு மற்றும் சத்தியத்திற்கு அர்ப்பணிக்கப்படுவதோடு நல்ல தீர்ப்பு துவங்கும் என்று அவர் கூறினார். "கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்." (நீதிமொழிகள் 3:3-4). "அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்." (நீதிமொழிகள் 3:8)

நீதிமொழிகள் 1ம் அதிகாரத்தின் கடைசி வசனம், "எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் வீக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்." (நீதிமொழிகள் 1:33)

நல்ல தீர்ப்பைக் கற்றுக்கொள்வதற்கும் நம் மனதை அதற்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ள வேண்டிய பணியை நாம் செய்யவேண்டும். இதில் சாலொமோன் இராஜா நம்மை காட்டிலும் மேம்பட்டவராக இருந்தார். அவருடைய மனம் ஞானத்தினாலும், நம்முடைய பரலோகத் தகப்பனின் நல்ல தீர்ப்பின் அறிவுறுத்தல் களினாலும் நிரம்பி வழிந்தது. ஆயினும், நாம் இந்த உலகின் பல கவனச்சிதறல்களைத் தவிர்த்து, தேவனுடைய வார்த்தையில் நம் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்.

தாவீது இராஜா மற்றும் சாலொமோன் இராஜா, இருவருமே உலகின் கவனச்சிதறல்களுக்கு பலியானார்கள். ஆனாலும், ஒவ்வொன்றும் நமக்கு தெய்வீக தீர்ப்புக்களைக் கற்றுக்கொள்ள அழகான அறிவுரைகளை நமக்கு வழங்குகிறது. தாவீது இராஜா மற்றும் அவருடைய குமாரனாகிய சாலொமோன் ஆகியோரின் அறிவுரைகளின் குறிப்பிடத்தக்க ஒற்றுமையைக் நாம் கவனிக்கவேண்டும்.

"கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு." (சங்கீதம் 19:9-11)

இப்போது அவருடைய குமாரனாகிய சாலொமோன் இராஜாவின் வார்த்தைகளைக் கவனிக்கலாம்:"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப் பெற்றது; நீ இச்சிக்கத் தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல.அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும்

இருக்கிறது.அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக் கொள்ளுகிற எவனும் பாக்கியவான்." (நீதிமொழிகள் 3:13-18)

தீர்ப்பை அறிவுறுத்துவது நீதிமொழிகள் புத்தகத்தின் வாக்குறுதியாகும். தீர்ப்பு என்பது நம்முடைய ஆவிக்குரிய gyroscope (சக்கரத்தை ஒரே இடத்தில் நிறுத்தி சுழல வைக்கும் இயந்திரம்) ஆகும். இது விசுவாசத்தை நீடித்து தக்கவைக்கும் ஒரு முறையாகும். இது நம்முடைய குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாகும். இது தேவனுடைய ஞானம் மற்றும் அறிவுறுத்தலின் களஞ்சியமாகும். நீதிமொழிகளின் புத்தகம் குறிப்பாக மனிதனின் பலவீனத்தின் வழியாக அல்லது காரணமாக தேவனுடைய பலம் நமக்காக, நமக்குள் உருவாக்கப்பட்டது.

அவருடைய ஞானம், நீதி, தீர்ப்பு மற்றும் சமத்துவத்தை அறிய வேண்டும் என்று அவரை அணுகும்போது, இதை நம்முடைய "சொந்த கையேடாக" பயன்படுத்துவோம். பின்னர், தாவீது இராஜா (சங்கீதம்) மற்றும் சாலொமோன் இராஜா (நீதிமொழிகள்) போல, தெய்வீக தீர்ப்பை முறையாகப் பயன்படுத்த நாமும் மற்றவர்களுக்கு வழிகாட்டுவோம்.

# நீதி (Tzedek) மூன்று எழுத்து சொல்



*Jonathan Gray*

"விவேகம்,நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அடையலாம்."
(நீதிமொழிகள் 1: 3)

Tze-dek, Tzedak-ah, Tzad-dik என்ற மூன்று எபிரெய சொற்கள், நீதி, நன்கொடை, நீதிமானாகிய ஒருவர் என்ற பொருளை தருபவை. இந்த சொற்களை அடிப்படையாக வைத்து, குறிப்பிட்ட அர்த்தங்களை தரும் பல சொற்கள் எபிரெயத்தில் உள்ளன, இந்த சொற்கள் அனைத்தும் தொடர்புடையவைகளாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளவை களாகவும் உள்ளது.

நமது வேதத்தின் மற்ற மொழிபெயர்ப்புகளில், "நீதீ"யை (justice) குறிப்பிட அநேக ஆங்கில சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. NIV மொழிபெயர்ப்பில் "right" என்ற ஆங்கில சொல்லும் NASB மற்றும் Youngs Literal மொழிபெயர்ப்பில் "righteousness" என்ற ஆங்கில சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீதி மற்றும் நீதியானது, சரியானது அல்லது நியாயமானது அல்லது இயல்பானது என்ற பொருளை தரும் சொல் Strong's 6664 யில் இருக்கும் எபிரெய சொல் Ts-e-D-e-Q (ஒலிப்பு ரீதியாக) ஆகும்.

இந்த எபிரெய சொல் ஆங்கிலத்தில் Tze-dek என்று எழுத்து பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. tze-dek, tze-da-kah மற்றும் இவைகளுடன் தொடர்புடை, "நீதியுள்ள நபர்" என்று பொருட்படும் என்ற மூன்று எபிரெய சொற்களும் ஒரே மூலத்தை பகிர்ந்து கொள்கின்றன.

பழைய ஏற்பாட்டு வேத ஆராய்ச்சியின் கண்ணோட்டத்தில், இந்த மூன்று வார்த்தைகளும் Strong's 6664 எண்ணை சுற்றியே காணப்படுகிறது. Strong's 6664 யில் Tze-dek, Strong's 6666 யில் Tze-dak-ah மேலும் Strong's 6662 யில் Tzad-dik (உரிச்சொல்) உள்ளன.

இந்த மூன்று எபிரெய சொற்களும் ஒரே மூலத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. இது மூன்று எபிரெய எழுத்துக்களை கொண்ட மூல சொல். இடமிருந்து வலமாக படிக்கும்போது -ק – ר-צ — Tza-dei, Da-let, Qoph )Kof (செமிட்டிக் மொழிகளில் காணப்படும் வினைச் சொற்கள் (verbs) மற்றும் பெரும்பாலான பெயர்ச்சொற்கள்களின் (nouns) மூல சொற்கள் இவ்வாறு மெய் (consonants) எழுத்துகளின் (அல்லது உயிர் எழுத்து அல்லாத எழுத்துக்களின் - (non-vowels) வரிசையை கொண்டவைகளாக இருக்கும். மெய் வரிசையை கொண்ட மூல சொற்கள் பெரும்பாலும் மூன்று எழுத்துக்களை கொண்டவைகளாக இருக்கும். இது செமிட்டிக் மொழிகளின் மொழியியலின் தனித்துவமான அம்சம். நாம் கருத்தில் கொண்டிருக்கும் இந்த மூன்று சொற்களுக்கும் மூன்று எழுத்து கொண்ட மூலமே -Tz – D – Q.

**நீதியை கொண்டு நீதி**

மூன்று சொற்களுள் முதலான சொல்லாகிய, மூன்று எழுத்துக்களை கொண்ட எபிரெய சொல்,Tze-dek வேதத்தில் இவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது - "நீதியை, ஆம், நீதியை மட்டுமே நிலைநிறுத்து. அதனால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டை உடமையாக்கிக் கொள்வாய்."(உபாகமம் 16:20, திருவிவிலியம்)

இந்த வார்த்தை இரண்டு முறை வருவதால், நியாயமாக இருக்க, நாம் நீதியுடன் நீதி செய்யவேண்டும், என்று இந்த வசன பகுதி கூறுகிறதை போல தோன்றுகிறது. அதாவது பாரபட்சமின்றி நீதி செய்தல், நியாயமாக நீதி செய்தல். நீதியாக இருத்தல் ஒரு குழுவை காட்டிலும் மற்றொரு குழுவிற்கு ஆதரவு காட்டாமல் இருத்தல். ஒரு மொழிபெயர்ப்பாளர் Tzedek என்ற வார்த்தையை "equity " (நடுநிலை) என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறார். Schocken வேதத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். “Equity, equity you are to pursue, In order that you may live.”

**இந்த சொற்களின் அர்த்தம் என்ன?**

Tzedek / tzedakah என்ற சொற்களை துல்லியமாக மொழிபெயர்ப்பது கடினமாக தோன்றுகிறது. ஏனெனில் இவை, நீதி கொடை, உத்தமத்தன்மை, சமத்துவம், நேர்மை மற்றும் அப்பாவித்தனம், என்றெல்லாம் பொருள்படுகிறன்ற. இந்த சொல், கடுமையாக "சட்ட நீதி" என்பதை தவிர வேறு பல அர்த்தங்களை கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. சட்ட நீதி என்ற அர்த்தத்திலிருந்து இந்த சொல்லை வேறுபடுத்தி காட்டும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, "அவன் தரித்திரனானால், நீ அவன் அடகை வைத்துக்கொண்டு நித்திரை செய்யாமல், அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்ட உன்னை

ஆசீர்வதிக்கும்படி, பொழுது போகும் போது, திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்து விடவேண்டும், அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும் (tzedakah)" (உபாகமம்24: 12-13)

இந்த இடத்தில் சட்ட நீதி என்று மட்டுமே Tzedakah அர்த்தப்படமுடியாது. இது ஒரு ஏழை நபருக்கு ஒரே ஒரு வஸ்திரம் மாத்திரமே இருக்கும் ஒரு சூழ்நிலையைப் பற்றி பேசுகிறது. அதை அவர் கடனளிப்பவரிடம் அடகு வைத்துள்ளார். கடனை திருப்பிச் செலுத்தும் வரை வஸ்திரத்தை வைத்திருக்க கடனளிப்பவருக்கு சட்டப்படி உரிமை உண்டு. இருப்பினும், இந்த சட்டபூர்வமான அடிப்படையில் செயல்படுவது தவறான செயல் என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. நாம் கருணையுடன் நீதியைக் கடைப்பிடிக்கவேண்டும்.

கடுமையான சட்டத்தை பின்பற்றவதே ஏழை மனிதனின் நிலைமையை புறக்கணிக்கிறது. குளிர்ந்த இரவில் சூடாக இருக்க அவரிடம் வேறு எதுவும் இல்லை.

**நீதி யூத மதத்திற்கு ஏன் முக்கியமானது?**

நீதி பாரபட்சம் காட்டாமல் இருக்க வேண்டும். தோரா விவரிக்கும்படி, சட்டம், பணக்காரர், ஏழை, சக்தியுள்ளவன், சக்தியற்றவன், நாட்டில் பிறந்தவன், அந்நியன் என்று வேறுபாடு காட்டாது. "நியாயத்திலே முக தாட்சிணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பது போலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள், மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக, நியாயத்தீர்ப்பு தேவனுடையது." (உபாகமம் 1:17)இரக்கத்துடன் நீதி என்பதே Tzedek, ஒரு ஒழுக்கமான சமுதாயத்திற்கு தேவையான முதல் காரியம். யூதர்களின் புரிதலின்பாடு, Tzedek என்ற சொல்லிற்கு இரக்கம் ஒரு உள்ளார்ந்த அர்த்தமாகும். இரக்கம் என்பது இந்த வார்த்தையின் பிரிக்கமுடியாத பகுதியாக இருக்கிறது.

**நீதிமானாகிய ஒருவர்**

நமது மூன்றாவது மூன்று எழுத்து எபிரெய சொல்லாகிய Tzaddik (உரிச்சொல்) "நீதிமானாகிய ஒருவர்" என்று பொருள்படுகிறது - தேவனுக்கும், அவரை பின்பற்றுவோருக்கும் நடுவில் இருக்கும் ஓர் பாலம்.

Strong's 6662 யில் Tzaddik காணப்படும்.

Strong's 6662 யில் Tzaddik காணப்படும் Strong யின் (2001பதிப்பு) கருத்தின்படி, கே.ஜே.வி இதை நீதிமான்கள், நியாயமானது. சட்டபூர்வமான என்று மொழிபெயர்க்கிறது.

முன்பு வேத கதாபாத்திரங்களுள், பின்னர் ஆவிக்குரிய மூப்பர்களுள் நீதிமான்களாக கருதப்படும் ஜனங்களுக்கு யூத மதத்தில் கொடுக்கப்படும் தலைப்புதான் Tzaddik. யூத மரபில், யூத மதத்தில் உள்ள வேத கதாப்பாத்திரங்களில், யாக்கோபின் குமாரன் யோசேப்பு பெருபாலும் Tzaddik என்று அழைக்கப் படுகிறார். வேதத்தில் இருக்கும் மற்ற முற்பிதாக்கள் மேய்ப்பர்களாக இருந்தார்கள். ஆனால், யோசேப்பு, உலகத்தில் வாழ்ந்தாலும், பரிசுத்தமாகவும், நீதியாகவும் இருந்தார். இதுவே அவரை Tzaddik என்ற தலைப்பை பெற தனித்து நிற்க வைத்தது. எகிப்தியருடனும், சோதனைகள் மத்தியில் வாழ்ந்தபோதும் அவர் நீதியாக நடந்தார்.

கருத்து: சில முக்கிய பெயர்களில் Tzaddik அர்த்தமுள்ளதாக உள்ளது :தாவீது இராஜாவின் நாளில் சாதோக் என்ற ஆசாரியன், நீதியின் இராஜாவான மெல்கிசேதேக்கு.

# சமத்துவத்திற்கு மேல் சமபங்கு



*Benjamin and Gabriella Stein*

"அப்பொழுது நீதியையும், நியாயத்தையும், நிதானத்தையும், சகல நல்வழிகளையும் அறிந்துகொள்ளுவாய்." (நீதிமொழிகள் 2:9)

நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ள பல பாடங்களின் ஒரு சொல் சுருக்கம் - சமபங்கு. இது பூரணமான நீதியின் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. இது மனுக்குலத்தால் அடைய முடியாததும், ஆனால் தேவனுக்கு இயல்பான தொன்றாகும். சமத்துவம் என்பது சம வாய்பைக் குறிக்கிறது. இது சமத்துவத்திலிருந்து வேறுபடுகிறது. நாம் அனைவரையும் ஒரே மாதிரியாகக் காண்பதை காட்டிலும், நம்முடைய தனித்துவமான வல்லமைகளையும், திறன்களையும் தனித்தனியாக கருத்தில் கொள்கிறது.

ஞானம் தன்னில் தான் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். ஆனால் இது பல வழிகளில் பயன் படுத்தப்படலாம். அவற்றில் சில சுயநலமானவைகள், அவைகள் தேவனுடைய நிகழ்ச்சிகளுக்கு முரணானவை. சாலொமோன் இராஜா தேவ ஜனங்களுக்கு சரியாக சேவை செய்ய, ஞானம் மற்றும் நீதி மற்றும் அன்பின் கொள்கைகளோடு சமத்துவத்துடன் பணி செய்ய வேண்டியதாக இருந்தது.

**சாலொமோன் மற்றும் சமபங்கு**

ஒரு இளைஞனாக இருந்த சாலொமோன் தன் தந்தை தாவீதினால் தீர்க்கப்பட்ட தீர்ப்புகளை கண்டிருப்பார். அதில் தனது தந்தை நல்ல மற்றும் மோசமான தீர்ப்புகளை வழங்கியதையும் அவர் கண்டிருப்பார். தேவன் சாலொமோனிடம், " நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். " அதற்கு சாலொமோன் "உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்." (1இராஜாக்கள் 3:5,9) தேவன் சாலொமோன் இராஜாவினுடன் நிரூபித்தபடி, நமக்கும் உண்மையில் என்ன தேவை என்பதையும் எது சிறந்தது என்பதையும் பற்றிய சரியான புரிதல் அவருக்கு எப்போதும் உண்டு. நாம் ஒவ்வொருவரும் பெறும் விஷயங்களில் சமத்துவத்தை வழங்க, தேவனுடைய பரிபூரண புரிதல் அவரை அனுமதிக்கிறது. எதையும் அதிகமாகவோ, ஒருபோதும் மிகக் குறைவாகவோ கொடுக்காமல், நம் ஒவ்வொருவருக்கும் சரியான அளவை கொடுக்கிறார். அது சாலொமோனிடமும் காணப்பட்டது. அவர் கேட்ட அனைத்தையும், அதோடுகூட, அதை சரியாகப் பயன்படுத்துவதற்கான ஞானத்தையும் வழங்கினார். இஸ்ரயேல் இராஜ்யம் முழுவதிலும், தேவ ஜனங்களை சமத்துவத்துடன் தீர்ப்பளிப்பதற்கான ஞானம் சாலொமோனுக்கு வழங்கப்பட்டது.

வசனங்களின் படி அவருடைய சொப்பனத்தை தொடர்ந்து (1இராஜாக்கள் 3:16-28) புதிதாகப் பிறந்த குழந்தையின் மகப்பேறு விஷயத்தில் ஏற்பட்ட சர்ச்சைக்கு, சாலொமோன் பரிபூரண நீதியை வழங்கியதன் மூலம் நம்பமுடியாத அளவுக்கு ஞானத்தை வெளிப்படுத்தினார். சரியான தீர்ப்பை வழங்க, சாலொமோன் ஞானத்தை சமத்துவத்துடன் (நீதியும், அன்பும்) பயன்படுத்தினார். அவரது வார்த்தைகள் அந்த இரண்டு பெண்களின் தேவைகளை காட்டிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை வழங்கும்படிக்கு சாலொமோன் இராஜா தம்முடைய வார்த்தைகளால் அவர்களை ஊக்குவித்தார். குழந்தையின் தாயாக உரிமை கோரல்களை அவர்கள் முன்வைத்தபோது, சாலொமோன் அந்த குழந்தையின் உண்மையான தாயை (உள்ளுணர்வு மூலம்) அறிந்திருக்கலாம். ஆனால் அதை பார்த்துக் கொண்டிருந்த அவருடைய ஜனங்கள் அனைவரும், ஒரு சரியான முடிவையும் கூட, தனிச்சையாக எடுக்கப்பட்ட முடிவாக கண்டிருக்கலாம். ஆகவே குழந்தையை இரண்டு சமபாகங்களாக வெட்டி, ஒவ்வொரு பெண்ணும் நியாயமான பங்கைப் பெற வேண்டும் என்பதே சாலொமொன் இராஜாவின் தீர்ப்பாக இருந்தது. இந்த ஒரு அறிவிப்பினால் உண்மையான தாய் வெளிப்பட்டார். "அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள்." (1இராஜாக்கள் 3:26) இந்த வெளிப்பாட்டின் மூலம், "அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்." (1இராஜாக்கள் 3:27) என்று இராஜா அறிவித்தார். சாலொமோனின் ஞானமுள்ள செயல், அவர் தேவனிடமிருந்து பெற்ற தெய்வீக ஞானத்தை

உறுதிப்படுத்தியது மற்றும் நியாயத்தீர்ப்பை எப்போதும் சமத்துவத்துடன் நிரூபித்தது, இஸ்ரயேல் ஜனங்களுக்கு புதிய தரநிலையாக இருந்தது. சாலொமோனின் நியாயமான நியாத்தீர்ப்பு தூண்டுதலாக இருந்தது!

குழந்தையை இரண்டு சம பாகங்களாக வெட்டுவதற்கான, சாலொமோன் இராஜாவின் தீர்வு சமத்துவத்தின் அநீதியை வெளிப்படுத்தியது. சமத்துவத்துடன் தீர்ப்பளிக்க, சாலொமோன் இராஜா முதல் நிலையாக ஒவ்வொரு பெண்ணின் எதிர்வினைகளையும் கவனித்தார். இதனால் உண்மை வெளிப்பட்டது.

சாலொமோனின் தீர்ப்பு, பார்வையாளர்களில் ஒவ்வொரு சாட்சிக்கும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றின் படி வித்தியாசமான பாடங்களை கற்பித்தது. இரண்டு பெண்களைப் பொருத்தவரை, அவரது அறிக்கை உண்மையை வெளிப்படுத்தியது. பார்வையாளர்களுக்கு, சாலொமோன் இஸ்ரயேலை ஆளுவதற்கான நீதியான அதிகாரத்தைப் பெற்று தந்தது. தேவன் சாலொமோனை இஸ்ரயேலின் இராஜாவாக தேர்ந்தெடுத்தார் என்பதில் அவர்களின் மனதில் எந்த சந்தேகமும் இல்லை. "ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளிய ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்." (1இராஜாக்கள் 3:28)

தேவனையும் சமத்துவத்தையும் புரிந்து கொள்வதற்கான அழைப்பு தேவனுடைய அறிவை கண்டுபிடிக்கவும், சமத்துவத்தின் கொள்கையைப் புரிந்துகொள்ளவும், நீதிமொழிகள் 2ன் துவக்கம், ஒரு வல்லமையுள்ள நிபந்தனை அழைப்பைக் கொண்டுள்ளது. முதல் நான்கு வசனங்கள் நிபந்தனைகளை வழங்குகிறது, மேலும் வாக்குறுதி பின்வருமாறு: "நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு….. நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து…. அதை வெள்ளியைப்போல் நாடி… கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்." (நீதிமொழிகள் 2:1-9)

சமத்துவத்தைப் பற்றிய உண்மையான புரிதலைப் பெறுவது ஒருவர் தேவனைப் பற்றிய அறிவைக் கண்டுபிடித்ததைக் குறிக்கிறது. எல்லாவற்றிலும் பூரணமான சமத்துவத்தை செயல்படுத்துவதாக தேவன் கூறுகிறார். (யாக்கோபு 1:17-20) தேவனைப் பற்றிய உண்மையான அறிவைக் கண்டுபிடிப்பதற்கு, இதுபோன்ற குறுகிய பாதை உள்ளது, என்பதே இன்று உலகத்தின் பிரச்சனையாகும். உதாரணமாக, கிறிஸ்தவத்தின் பெரும்பகுதிகளில் இரட்சிப்பின் போதனைகளைப் பற்றி சமமாக எதுவும் இல்லை. அவிசுவாசிகளுக்கு இரட்சிப்பு வழங்கப்படுவதும் இல்லை. இந்த வகையான கிறிஸ்தவ போதனைகள் மூலம் தேவனைப் பார்க்கும் பலருக்கு, அவர் நியாயமற்றவராக தோன்றுகிறார்.

அவிசுவாசிகள் ஒருபோதும் இயேசுவின் பெயரைக் கேட்கவும் மாட்டார்கள் அல்லது கிறிஸ்தவமல்லாத மதங்களால் பாதிக்கப்படவும் மாட்டார்கள். தேவனிடமிருந்து எதையாவது கற்றுக் கொள்ளும் அவிசுவாசிகளில், பெரும்பாலானவர்களுக்கு, தேவன் நீதியுடனும் அன்புடனும், நியாயமாகவும் சமத்துவமாகவும் தீர்ப்பளிப்பவர் என்பதை காட்டிலும் அவர் கோபமான தேவன் என்றே கற்பிக்கப்படுகிறது. இன்று, மனுக்குலம் தேவனையும், இயேசுவையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள், தேவனுடைய தரத்திலோ அல்லது மனுக்குலத்தின் தரத்திலோ சமமாக இல்லை. மேலும், இயேசுவின் சொந்த வார்த்தைகளைப் பார்த்தால் இன்னும், அவருடைய போதனையில், அவிசுவாசிகளுக்கான வாய்ப்பை குறைக்கிறார். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்." (யோவான் 6:44) மேலும் "அநேகர் அழைக்கப்படுகிறார்கள், சிலர் தொிந்துகொள்ளப் படுகிறார்கள்." (மத்தேயு 22:14) "தேவனுடைய அறிவைக் கண்டுபிடிப்பதற்கும், "நீதியையும், தீர்ப்பையும், சமத்துவத்தையும் புரிந்துகொள்வதற்குமான" வாய்ப்பு இந்த உலக மனுக்குலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த வாழ்நாளில் அவர்களுக்கு சமமான வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை.

## தேவனின் சமத்துவத்தின் உண்மை

தேவனுடைய ஈடுபலியின் அருமையான ஏற்பாட்டில் சமத்துவம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப் படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரிந்தியர் 15:21-23)

தேவைப்பட்டதினால், முழு மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு தேவன் ஒரு சமமான தீர்வை வழங்கினார். ஆதாமுக்கு பிறந்த அனைவருக்கும் இரட்சிப்பு தேவை என்பதால், மீட்பின் தீர்வு அவர்கள் அனைவருக்கும் பொருந்தும். தேவனுடைய சமத்துவமான திட்டதில், இரட்சிப்பு என்பது ஒருவர், ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டரா அல்லது எளிதான குழந்தைப் பருவத்தைக் கொண்டிருந்தாரா என்பதைப் பொறுத்தது

அல்ல. ஒருவரை தேவனிடம் நெருங்கி வருவதற்கும் அல்லது அவர்களை அவர் தள்ளிவிடுவதற்கும், இரட்சிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட அனுபவங்களை சார்ந்ததல்ல. முழு மனுக்குலமும் சமமான (முற்றிலும் நியாயமான) வாய்ப்பைப் பெற்றுகொள்வதற்கு, ஈடுபலி என்ற தேவனுடைய சமத்துவமான ஏற்பாடு, முழு மனித இனத்தையும் இயேசுவின் நீதியுள்ள இரத்தத்தினால் விலைக்கு வாங்கியது.

இஸ்ரயேல் மீது சாலொமோன் இராஜாவின் நீதியான ஆட்சியைப் போல, தேவனுடைய நீதியுள்ள இராஜ்யத்தில், மகிமை அடைந்த கிறிஸ்து, (தலை மற்றும் சரீரம்) சமத்துவத்துடன் உலகை ஆளுவார்கள். இந்த உலகம், இஸ்ரயேல் ஜனங்களைப் பின்பற்றி, அவர்களின் நீதியான ஆட்சியை அங்கீகரித்து கீழ்ப்படியும். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:34)

ஆம், மனுக்குலத்தில் ஒவ்வொருவரும் பாவங்களுக்கு மனம் வருந்தி, பரிசுத்தமான பெரும்பாதையில் நடக்க வேண்டும். ஆனால் தேவனுடைய இராஜ்யத்தில், சோதனைக்காரனின் தொடர்ச்சியான தாக்குதல் இல்லாமல், சத்தியத்தின் நிச்சயமற்ற தன்மை அல்லது மனித விளக்கங்கள் மற்றும் தாக்கங்களை சார்ந்து இல்லாமல் ஒரு பரிபூரணமான சுற்றுசூழலாக மாறும் என்று, நமக்கு வாக்களிப்பட்டுள்ளது. (ஏசாயா 35:8-10) தேவனுடைய இராஜ்யத்தின் இந்த மகிமையான பாகம், தேவனுடைய சமத்துவத்திற்கு சரியான ஒரு எடுத்துக்காட்டு, ஏனெனில் இது உண்மையில் அனைவருக்கும் இரட்சிப்புக்கான வாய்ப்பை "பரிபூரண நியாயத்தோடு" அளிக்கிறது.

தேவனுடைய சமத்துவம் இன்று விசுவாசத்தினால் காணப்படுகிறது தேவனுடைய பரிபூரண சமத்துவத்தின் திட்டத்திற்கு சான்றுகள் இல்லாவிட்டாலும், (இந்த உலக மனுக்குலத்திற்கு) இன்று அவர் அளித்த மீட்பு மற்றும் இரட்சிப்பின் பரிபூரண ஏற்பாட்டை (அழைக்கப் பட்டவர்களால்) விசுவாசத்தின் கண்களின் வழியாக காணமுடிகிறது.

பரம அழைப்பைப் பற்றி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார் : "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன"(மத்தேயு16:24)இயேசுவை பின்பற்றும் ஒரு வாழ்க்கை - வாய்ப்பு மற்றும் சோதனை ஆகிய இரண்டையும் விளைவிக்கிறது.

வாய்ப்புகளைப் பொருத்தவரை, திறமைகள் மற்றும் வாய்ப்புகள் இரண்டுமே அழைக்கப்பட்டவர்களுக்கு "ஒவ்வொரு மனுஷருக்கும் அவரின் பல (தனி அல்லது தனித்துவமான) திறனுக்கேற்ப" விநியோகிக்கப் படுவதாக, தாலந்துகளின் உவமை கற்பிக்கிறது. (மத்தேய,25:14-30) நாம் பெறும் தாலந்துகள் (திறன்கள்), மற்றும் வாழ்க்கையில் நம்முடைய நிறைய (வாய்ப்புகள்), ஒவ்வொரு நபருக்கும் அவர்களின் பின்னணி, பயிற்சி, திறமை, இருதய நிலை போன்றவற்றிற்கு ஏற்ப குறிப்பிட்டு வழங்கப்படுகிறது.

இந்த உவமையில், நமக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் தேவன் நம்மைப் பொறுப்பேற்பார் என்று இயேசு கற்பிக்கிறார். தீர்க்கதரிசனம், கற்பித்தல், மேய்ச்சல், புத்திமதி, விருந்தோம்பல், கொடுப்பது, ஜெபம் போன்ற தாலந்துகள் நமக்கு கொடுக்கப்பட்டாலும், மேலும் நமக்கு வழங்கப்படும் திறமைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் பொதுவாகவோ அல்லது தனிப்பட்டவைகளாக இருந்தாலும் , அதற்கும் நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் அது கற்பிக்கிறது. தேவன் நம்முடைய தனித்துவமான திறன்களின்படி அனைத்தையும் நமக்குக் கொடுத்திருப்பதால், நாமும் இயேசுவை போல, எல்லாவற்றையும் தேவனுக்கு கொடுத்து, அவரை பின்பற்ற வேண்டும்.

நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றுவதன் மூலம், நாம் தனித்துவமான, விசுவாசத்தை வளர்க்கும் அனுபவங்களை எதிர்ப்பார்க்க வேண்டும். இயேசுவை போலவே, நம் ஒவ்வொருவருக்கும் தற்போதைய மற்றும் எதிர்கால நோக்கத்திற்காகத் தேவைப்படும் சரியான அனுபவங்கள் வழங்கப்படுகிறது. (எபிரெயர் 12:11) நம்மில் யாவரும் இன்னொருவரின் அதே திறமைகள் மற்றும் வாய்ப்புகளுடன் நமது பயணத்தைத் தொடங்குவதில்லை, மற்றும் அவர்களுடைய அதே சிரமங்களை யாரும் அனுபவிப்பதில்லை. எனவே, நாம் சகோதரர்களோடு ஒப்பிடுவதை தவிர்க்க வேண்டும். நம்முடைய நடைகளை நம்முடைய சகோதரர்களுடன் ஒப்பிடுவது நம்முடைய மாம்சத்திற்கு இயல்பானது. இது போன்ற ஒப்பீடுகளை நாம் செய்யும்போது, நம்முடைய மாம்சம் நம்மை மேற்கொண்டு, நம் இருதயங்களில் பெருமையை நுழைய அனுமதிக்கும், நாம் நம்முடைய சகோதரர்களை விட "அதிகமாக" சாதித்துவிட்டோம் என்றும் நம்மை நம்பச் செய்யும். (1 கொரிந்தியர் 4:7)

இதற்கு எதிராக, நம்முடைய சோதனைகளை ஒப்பிடும் போது, அது குறைவாக காணப்படலாம். இந்த விஷயத்தில், மற்றவர்களுடன் ஒப்பிடும்போது நம்முடைய சோதனைகளை நாம் ஒருபோதும் சாதாரணமாகவோ அல்லது சிறியதாகவோ கருதிவிடக்கூடாது. அதற்கு பதிலாக, உடலில் பல உறுப்புகள் இருந்தாலும், ஒவ்வொன்றும் தனித்துவமானதும், முக்கியமான செயல்பாட்டைக் கொண்டுள்ளதையும் நாம் நினைவில் கொள்ளும்படிக்கு அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை ஊக்குவிக்கிறார். (ரோமர் 12:3-13) தேவன் இயேசுவுக்கு செய்ததுபோல, நாம் ஒரு குறிப்பான மற்றும் அருமையான நிலைக்கும் ஆயத்தப்படுவதற்கு நம்முடைய ஒவ்வொரு அனுபவங்களையும் அவர் கவனித்து வருகிறார்.

தேவனுடைய சித்தத்தின்படி, ஆவியின் கிருபையை வளர்ப்பதற்கு, நம் ஒவ்வொருவருக்கும் தேவையான (மற்றும் சமமான) அனுபவங்களை அளிப்பதாக தேவன் நமக்கு வாக்களித்திருக்கிறார். (எபிரெயர் 12:6-7) நம்முடைய ஒவ்வொருவரின் திறனுக்கு ஏற்ப நம்முடைய ஒவ்வொருவரின் நடைகளுக்கும் சோதனைகள் அனுமதிக்கப்படுகிறது. நம்மில் ஒருவருக்கான போராட்டம் இன்னொருவருக்கான போராட்டமாக இருக்காது. இதேபோல், ஒருவருக்கு எளிதில் வரக்கூடிய ஒரு வலிமை இன்னொருவருக்கு அடைய முடியாததாக இருக்கலாம். இவ்விரண்டிலும், சுவிசேஷ யுகத்தின் போது கிறிஸ்துவின் மணவாட்டியின் வளர்ச்சியில் தேவனுடைய சமத்துவத்தின் கொள்கையை நாம் காணலாம். நம்முடைய அனுபவங்களில், நம்முடைய திறமைகள், சோதனைகள், பரீட்சைகள் மற்றும் போராட்டங்களில், நம்முடைய புது சிருஷ்டியின் வளர்ச்சியின் மூலம் தேவன் நம்மை அவரிடம் நெருங்கி வரவைப்பதை நாம் காணவேண்டும். தேவனே நம்முடைய நியாயாதிபதியாக இருந்து, நம்மை வளர்த்து, சமத்துவத்தோடும், அவருடைய பரிபூரண நீதியோடும் நம்மை நியாயந்தீர்க்கிறார் என்பதற்கு நாம் நன்றி கூறுகிறோம்.

சாலொமோன் இராஜா இஸ்ரயேல் இராஜ்யத்தை நீதியாக ஆட்சிச் செய்தது போல, நம்முடைய தேவனும் அவருடைய எல்லா திட்டங்களிலும், நோக்கங்களிலும், அவருடைய பரிபூரண ஞானம், வல்லமை, நீதி, அன்பு மற்றும் இரக்கத்தில் சமமானவராக இருக்கிறார். சாலொமோன் இராஜாவின் நீதியான ஆட்சியின் கீழ் வாழ்வதற்கு இஸ்ரயேல் புத்திரர் ஆசீர்வதிக்கப்பட்டதை போல, உண்மையான நியாயத்தோடும் அன்போடும் நம்முடன் தொடர்பு கொள்ளக்கூடிய தேவனை சேவிப்பதற்கு நாம் மிகுந்த பாக்கியசாலிகளாக இருக்கிறோம்.

தேவனுடைய மகத்தான ஒப்புரவாக்குதலின் திட்டம், விரைவாக, அனைத்து மனுக்குலத்திற்கும் பரிபூரண சமத்துவத்தோடு இரட்சிப்பை வழங்கும் என்று, உலகில் தேவன் இன்று தீமையை அனுமதிப்பதைப் பற்றிய உண்மையும், நீதியான ஒரு இராஜ்யத்தைப் பற்றிய அவருடைய வாக்குத்தத்தமும் நமக்கு உறுதியளிக்கிறது. தேவனுடைய திட்டத்தின் அருமையான அம்சத்தை நம்முடைய கண்கள் காண்பதினாலும், நம்முடைய செவிகள் புரிந்துகொள்வதாலும் அவைகள் பாக்கியமுள்ளது!

அபூரணமான மனுஷனிடமிருந்து ஞானமுள்ள ஆலோசனை

# சாலொமோன் ஒரு வழக்கு ஆய்வு



***James Mistarz***

"என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்."(1நாளாகமம் 28:9)

கிட்டத்தட்ட எல்லையற்ற சாத்தியக்கூறுகள், முடிவற்ற வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான தனிப்பட்ட முன்னேற்றம் கொண்ட உலகில் சாலொமோன் வாழ்ந்தார். ஞானம், செல்வதும் மற்றும் வணங்குதல் ஆகியவற்றுக்குள்ளாக அவர் ஏறுவதற்கு முடிவே இல்லை என்று தோன்றுகிறது. இருப்பினும், இந்த உயர்வு அவரது சொந்த பயணத்தில் தவிர்க்க முடியாத மோசமான முடிவைக் காணவிடாமல் தடுத்திருந்தும், அவர் ஒருபோதும் சாதனையின் முடிவு கோட்டைத் தாண்டியது போல் செயல்படவில்லை. காலப்போக்கில், தனது தந்தையின் அபாயகரமான எச்சரிக்கையின் பலியாக, சாலொமோனின் கற்பனைகளும் எண்ணங்களும் அவரை தனது தந்தையின் தேவனிடமிருந்து விலக்கிச் சென்றன. சாலொமோன் இராஜா மிகுந்த செல்வத்தையும், உயரிய புகழையும், பூமியின் மேல் மகத்தான அரண்மனைகளையும், நகரங்களையும் முயன்று பெற்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட்டது. ஆனால் சாலொமோன் இராஜா ஒருபோதும் திருப்தி அடையவில்லை என்பது போல, இன்னும் அதிகமானவைகளை பெற விரும்பினார். அவரது வாழ்க்கையின் முடிவில், அவர் எல்லாவற்றையும் இழந்தார். அவர் தேவனுடைய பார்வையில் தோல்வியுற்றார்.

## ஒரு பரிபூரண இருதயம்

சாலொமோன் இராஜாவாக்கப்பட்ட நாளில், தேவனுடைய வீட்டைக் கட்ட உதவுவதற்காக வெள்ளி, பொன் மற்றும் விலை உயர்ந்த இரத்தினங்களை கொடுக்கும்படி, அவருடைய தகப்பனாகிய தாவீது இராஜா, இஸ்ரயேல் ஜனங்களிடம் கேட்டார். ஜனங்கள் தாராளமாக கொடுத்தார்கள். "உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும்" தங்கள் பொருட்களை ஜனங்களும் தாவீது இராஜாவும் கொடுத்ததினால், அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். (1நாளாகமம் 29:1-9) ஜனங்கள் தங்களுடைய தீர்மானத்தில் முழுமையான சமாதானத்துடன் இருந்தார்கள் என்பதை இந்த சொற்றொடரின் அர்த்தம் குறிக்கிறது. அவர்கள் தங்கள் இராஜாவின் வேண்டுகோலுக்கு அரைமனதோடு அல்ல, முழுமையாக இணங்கி, அவர்களின் பரிபூரணமான நோக்கத்தை அவர்களின் செல்வத்தை கொடுத்து செயலாற்றினார்கள்.

தன்னுடைய குமாரன் சாலொமோன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதாக தாவீது இராஜா ஜனங்களுக்கு அறிவித்த நாளில், தேவனை உற்சாகமாக சேவிக்கும் இருதயத்தோடு தேவனை சேவிக்கும்படி தாவீது இராஜா சாலொமோனுக்கு அறிவுறுத்தினார். (1நாளாகமம் 28:9) பல ஆண்டுகளுக்குப் பிறகு, சாலொமோன் இராஜா தேவனுடைய ஆலயத்தையும், இராஜாவின் வீட்டையும் முடித்த பிறகு, அவர் ஒரு பரிபூரணமான இருதயத்தை கொண்டிராமல், பரிதாபமாக வழிதவறினார். (1இராஜாக்கள் 11:3-6) சாலொமோன் தம்முடைய இருதயத்தை தேவனிடமிருந்து விலகிச் செல்வதற்கு அவர் தன் மனைவிகள் மற்றும் மறுமனையாட்டிகளின் விருப்பத்தை அனுமதித்தார். அவருடைய இருதயம் தேவனை விட்டு வெகு தொலைவில் சென்றிருந்ததினால், அவர் தன் மனைவிகளின் புறஜாதி தெய்வங்களை வணங்க அனுமதித்தார். (1இராஜாக்கள் 11:7-8)

மனிதர்களாக, நாம் சிந்தையின் மூலம் "தேவை" எண்கிறோம், ஆனால் நமது இருதயங்களின் மூலம் "விரும்பு" கிறோம். இராஜாவாகிய சாலொமோனுக்கு 700 மனைவிகளும், 300 மருமனையாட்டிகளும், கிட்டத்தட்ட வருஷத்தின், ஒவ்வொரு நாளுக்கு மூன்று பேரா தேவைப்பட்டார்கள்? இல்லை, அவருக்கு அவர்கள் அனைவரும் "தேவை" இல்லை, வெறுமனே அவர் அவர்களை "விரும்பினார்". தேவன் அவருடைய வாழ்க்கையில் ஒவ்வொரு தேவைகளுக்கும் ஏராளமாக வழங்கினாலும், அவருடைய இருதயம் அதில் திருப்தியடையவில்லை!

## விருப்பமுள்ள மனது

துதித்தல் மற்றும் நன்றி செலுத்துதல் விஷயத்தில், சாலொமோன் இராஜாவிற்கும் அவருடைய தந்தையாகிய தாவீது இராஜாவுக்கும் இடையிலான வேறுபாடு வியக்க வைக்கிறது. தாவீது இராஜா தனது வெற்றிக்கு நன்றி செலுத்துவதுடன், அவரது இழப்புகளில் தாழ்மையுடன் இருந்தார் என்பது தெளிவாகிறது. தாவீதின் நூற்றுக்கணக்கான சங்கீதங்கள் அவரது பரலோகத் தகப்பனை துதித்தலில் இருந்த ஆக்கபூர்வமான பிரதிபலிப்பு பழக்கத்தைக் காட்டுகிறது.

இதை ஒப்பிட்டுகையில், சாலொமோனின் பொது ஜெபங்களும், அவர் தேவனைப் புகழ்ந்ததற்கான சான்றுகளும் குறைவு. சாலொமோன் இராஜாவின் நீதிமொழிகள் வாழ்க்கைக்கு வல்லமையுள்ள வழிகாட்டிகளாக இருந்தாலும், அவை தேவனைப் புகழ்வதற்கோ அல்லது தேவனை புகழ்ந்து பேசுவதற்கான அறிவுரைகள் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது. நீதிமொழிகள் 1: 7, 2: 5-6, 3: 5,7,9, 10:22, 14:26, 20:22, 25:22, மற்றும் 29:26 ஆகியவற்றில், சாலொமோன் தேவனை சர்வ வல்லமையுள்ளவராக அவரை கனப்படுத்தினார். ஒருவேளை இதுவே அவரை புகழ்ந்து பேசும் விதமாக இருக்கலாம்.

சாலொமோனின் வாழ்க்கையில் அவர் ஏறெடுத்த இந்த குறைவான புகழ்ச்சி, நமக்கு எச்சரிப்பான ஒரு திறவுகோலாக இருக்கலாம். நன்றியுணர்வு இல்லாத ஒரு நிலை, தேவனுடைய இராஜ்யத்திற்கு எதிராக நம்மை தடுக்கக்கூடிய தாக்கங்கள், நம் வாழ்க்கையில் வருவதற்கான கதவைத் திறக்கிறது. ஒருவேளை, சாலொமோன் இராஜாவின் குறைவான நன்றியுணர்வு, அவருடைய மனைவிகளின் நலன்களை ஊடுருவி, தேவனுக்கு முன்பாக தீமையைச் செய்வதற்கான ஒரு தளமாக மாற அனுமதித்திருக்கலாம். தனது பல மனைவிகளுடனான சிக்கலான உறவுகளில், அவர் தனது சொந்த விருப்பத்தின் கட்டுப்பாட்டை விட்டுவிட்டார். அவருடைய மனைவிகளையும், மருமனையாட்டிகளையும், தன்னுடைய செயல்களை அதிகாரம் செலுத்த (உத்தரவு கொடுக்க) அனுமதித்தார். பூமிக்குரிய இன்பங்களுக்கும், தேவனுக்கும் இடையில் சாலொமோனின் இருதயம் பிரிக்கப்பட்டது.

நம்முடைய நாட்களிலும், நம்முடைய வாழ்க்கையிலும், நன்றியுணர்வு மற்றும் திருப்தியான மனநிலை இல்லாத நிலை நாம் எதிர்கொள்ளவேண்டிய ஒரு தீவிரமான கேள்வியாகும். தேவனிடமிருந்து நாம் விலகிச் செல்வதற்கான முதல் படியாக இது இருக்கலாம். "நோவாவின் நாட்களைப் போல" நம்முடைய நாட்களில், இவ்வளவு அறிவு, ஐசுவரியம் மற்றும் அங்கீகாரத்தை அணுகக்கூடிய காரியங்கள், இது எவ்வளவும் போதுமானதா? தாவீது இராஜாவைப் போலவே, நம் சிந்தனைகள் இருதயத்தின், நிலையாக கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும்.

தேவனை சேவிப்பதற்கும், மகிழ்விப்பதற்கும் அவர் கொண்டிருந்த மிகபெரிய விருப்பமே, தாவீது இராஜாவின் இருதயத்தில் மிக முக்கியமாக உணர்வாக இருந்தது. தாவீது இராஜாவைப் போலவே, நம்முடைய "சிந்தனைக்கு" நம்முடைய "உணர்வுகளை" அர்ப்பணிக்கும் போது, நாமும் உள்ளான மனுஷனில் முழுமையான அமைதியுடன், தேவனை முழுமையான இருதயத்துடன் சேவிப்போம்.

நன்கு சமசீரான மனநிறைவுக்கும், சமாதானம் மற்றும் மகிழ்ச்சியான நல்லுணர்வுகளுக்கும் தாவீது இராஜா ஒரு நித்தியமான உதாரணத்தை (அவருடைய குமாரனுக்கும், நமக்கும்) விட்டு சென்றார். தேவன் அவருடைய வாழ்க்கையை முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்ததையும், ஒவ்வொரு செயலையும், அவருடைய தீர்மானங்களின் ஒவ்வொரு விளைவுகளையும் அவர் மேற்கொள்வதையும் அவர் அறிந்திருந்தார். (1நாளாகமம் 28:20)

## தேவனை புறக்கணித்தல்

"முதன்மையான விஷயங்களுக்கு முதலிடம் கொடுப்பதற்கும்" மற்றும் வாழ்க்கையை எவ்வாறு எளிமையாக வாழ்வதற்கும், உலகிலேயே ஞானமுள்ள மனிதனாக, சாலொமோன் இராஜா நன்கு அறிந்திருந்தார். ஆனால் எப்படியோ, முதன்மையாக தேவனை நேசிப்பதில் சாலொமோன் தவறினார். தனக்கு ஏராளமாக கொடுத்த தேவனை சாலொமோன் விட்டு விலகினார்.

சேபா நாட்டு இராஜ ஸ்திரீ இராஜாவைப் பார்வையிட்ட போது, அவருடைய ஞானம், செழுமை, மற்றும் கீர்த்தி ஆகியவற்றால் அவள் ஈர்க்கப்பட்டாள். (1இராஜாக்கள் 10:3-8) இஸ்ரயேலில் தேவனுடைய ஜனங்கள் மீது நீதியையும், நியாயத்தையும் நிறைவேற்றும் படியாக, தேவன் சாலொமோனை இராஜாவாக்கினார் என்பதை அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இருப்பினும், சாலொமோனின் பணிவு மற்றும் நன்றி உணர்வை குறித்து அவள் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அவள் சாலொமோனின் ஞானத்தினால் மூழ்கடிக்கப்பட்டாள் என்று வெறுமனே சொல்லப்படுகிறது.

நம்முடைய விருப்பங்களை எளிமையாக வைத்திருக்கவேண்டும் என்று இயேசு கூறுகிறார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." (மத்தேயு 6:33)

நமக்கு தேவையான அனைத்தையும் தேவன் கொடுப்பார் என்றும், அவருக்குள் மனநிறைவாக இருக்கவேண்டும் என்ற நம்முடைய விருப்பத்தில் தரித்திருக்கவேண்டும் என்பதை நாம் "அறிந்திருப்பதே" நமக்கு வாக்களிக்கப்பட்ட பரிபூரண சமாதானமாகும். ஒரே ஒரு தீர்மானிக்கும் காரணி மட்டுமல்ல, நம் வாழ்வில் ஒரு கணமும் நம் முடிவை தீர்மானிப்பதுமில்லை என்று தாவீது இராஜா கற்பித்தார்.

தோல்வியுற்ற தருணங்களில், நாம் மனந்திரும்பி தேவனிடம் திரும்பி வர வேண்டும் என்று அவர் கற்பித்தார். இதற்கு எதிராக, நம்முடைய தவறுகளுக்கு நாம்

மனந்திரும்பாவிட்டால், அந்த தவறுகள் அதிகமான பேரழிவை தரும் விளைவுகளின் பாதையாக மாறும் என்பதை சாலொமோன் நிரூபித்தார்.

ஆனால் தாவீதும் தேவனை புறக்கணித்தார். அவர் உரியாவைக் கொன்ற பாவமானது, அவரது குமாரனுடைய பாவத்தை காட்டிலும் மிகப் பெரிய பாவமாகத் தோன்றலாம். ஆயினும் சாலொமோனின் பாவத்திற்குள் விழுந்த காரியம் மிகவும் நுட்பமானதும், தொடர்ச்சியான விழுகையும், தேவனிடம் இருந்து நிரந்தரமான பிரிவை ஏற்படுத்தியது. தாவீது இராஜா முழுமையாக மனந்திரும்பி, தேவனால் மன்னிக்கப்பட்டார். அவருடைய சங்கீதங்கள் புகழ்ச்சியால் நிரம்பியிருந்தது. கடைசி எட்டு அதிகாரங்கள் தாவீதின் முடிவான சிந்தனைகளாக தோன்றுகிறது. இவைகள் கர்த்தரை புகழ்வதற்காக அர்ப்பணிக்கப் பட்டவைகள். தேவனுடைய பார்வையில் தாவீத தனது முக்கியமற்ற நிலையை புரிந்துகொண்டார். தேவன் தன்னிடமும் அக்கறை காட்டுவதை எண்ணி அவர் தொடர்ந்து ஆச்சரியப்படுவதாக தோன்றுகிறது. (I சாமுயேல் 18:18, சங்கீதம் 8:4, 144:3) இதற்கு மாறாக, சாலொமோன் தனது அற்பமான நிலையை மறந்துவிட்டார். தாவீது மேய்ப்பனாக இருந்தபோது, தாழ்மையை அஸ்திபாரமாக கொண்டிருந்ததினால், தேவனுக்கு உண்மையில் பிரியமாக இருக்கும் நன்றியையும், புகழையும் வழங்க முடிந்தது. சாலொமோன் தனது ஆயிரக்கணக்கான நீதிமொழிகளில் உண்மை மற்றும் ஞானத்தின் தெளிவுக்கு பெயர் பெற்றவர்.

அவருடைய ஞானம் அவரை பெருமையின் அடித்தளத்திற்கு இட்டுச் சென்றதாகத் தோன்றுகிறது. மனத்தாழ்மை தேவனுக்கு நீடித்து கீழ்ப்படிதலுக்கான சூழலை வழங்குகிறது. இது நன்றியறிதல் மற்றும் நன்றியுணர்வுக்கும் தாய். சாலொமோன் தோல்வியை நோக்கிச் செல்வதற்கு மனத்தாழ்மை ஒரு "மாற்று மருந்தாக" இருந்திருக்கும். அவர் மனத்தாழ்மையும், தேவன் அவருடைய நன்மைக்காக செய்யும் காரியங்களில் திருப்தி அடைந்திருந்தால் அவர் சீர்பொருந்திருக்கலாம். தேவன் நமக்கு காண்பிக்கும் இரக்கத்திற்காக நன்றியுணர்வோடு மனத்தாழ்மையில் நிறைந்திருப்பதை ஒரு பழக்கமாக மாற்றுவோம். எல்லா நற்பண்புகளிலும் மனத்தாழ்மை மிகப் பெரியது, துவக்கத்தில் அதைக் கற்றுக்கொள்ளுங்கள், அல்லது சாலொமோனைப் போலவே, தேவன் நமக்குக் கற்பிக்கும் கடைசி பாடமாக இது இருக்கும்.

**அவளுடைய கிரியைகள் அவளை புகழும்**

# குணசாலியான ஸ்திரி



"அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது." (நீதிமொழிகள் 31:31)

முழு மனுக்குல வரலாற்றிலும், ஞானிகள் நல்லொழுக்கத்தைப் பின்தொடர்ந்திருக்கிறார்கள். "நற்பண்பு மற்றும் சிறந்த ஆத்துமாவை" குறிப்பதற்கு வேதம் நல்லொழுக்கம் என்ற வார்த்தையை பயன் படுத்துகிறது. (Strong's 1411). எனவே நல்லொழுக்கமுள்ள ஒருவர் உறுதியான குணலட்சணங்கள், ஒழுக்கமுள்ள சிறப்பம்சம் மற்றும் உள்ளார்ந்த மதிப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை கொண்டிருக்கிறார். நீதிமொழிகள் 31, நல்லொழுக்கத்தின் ஒரு அருமையான தரத்தை விவரிக்கிறது. இதில் ஒரு தெய்வீக ஸ்திரீயின் தன்மை மற்றும் அவளது நற்குணம் வெளிப்படுத்தப் படுகிறது.

இராஜாவாகிய லேமுயேல் தனது தாயிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்து கொண்ட வார்த்தைகள் இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. லெமுயேல் என்ற பெயர் சாலொமோன் இராஜாவுக்கு ஒரு பாராட்டை தெரிவிக்கும்படி அல்லது ஒரு புனைப்பெயர் என்று பலர் நம்புகிறார்கள். இதற்கு "தேவனுக்குரிய ஒருவர்" என்று பொருள். தேவ ஜனங்களின் அனுபவத்தில் பொதுவாக இருப்பதுபோல, நாமும் அடிக்கடி வழிதவறி, நம் வாழ்க்கையில் அவருடைய சித்தத்திலிருந்து விலகிச் சென்றாலும், நாம் இன்னும் தேவனுக்கு சொந்தமானவர்களாகவே இருக்கிறோம். அவருடைய திருத்தம், களை நறுக்குதல், அவருடைய கிருபையை குறித்து நாம் நம்பிக்கையுடன் இருக்க முடியும். (எபிரெயர் 12:7)

லெமுயேல் சாலொமோன் இராஜாவாக இருந்திருந்தால், இந்த பாடங்களைக் கற்பித்த அவரது தாயார் பத்சேபாளாக இருக்க வேண்டும். அவள் வாழ்க்கையில் அனுபவித்த கடினமான அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, உண்மையான பெண்மையின் நற்பண்புகளை குறித்த அறிவுரைகள், அவளுடைய இருதயத்தில் எவ்வளவு அற்புதமாக மதிப்பிட்டப்பட்டுள்ளது. எப்படி:

**வசனம் 1 :** அவரது தாயார் லெமுயேலுக்கு இந்த சத்தியங்களை கற்பித்தார் என்று விளக்குகிறது. நல்ல தாய்மார்கள் தங்கள் வாழ்க்கைக்குரிய பல பாடங்களைக் கற்பிக்கிறார்கள், நல்ல குமாரர்கள் தங்கள் தாய்மார்களின் வார்த்தைகளைக் கேட்டு, புரிந்துகொண்டு, அவைகளை நம்புகிறார்கள். ஆனால் ஒரு மனிதன் தன் தாய் கற்பிக்கும் பாடங்களை உணரும் ஒரு உண்மையான வாஞ்சை, பல வருட அனுபவங்களக்குப் பிறகு, அவனுடைய வாழ்க்கையில் அவளுடைய வார்த்தைகளின் உண்மை உறுதி செய்யப்பட்ட பிறகு, அவளுடைய அறிவுறுத்தலுக்காக மென்மையான நன்றியுடன் திரும்பிப் பார்க்கிறான். ஒருவேளை நன்றியோடு இந்த திரும்பிப் பார்த்தலே, ஒரு நல்லொழுக்கமுள்ள ஸ்திரீயைப் பற்றிய இந்த அறிவுரைகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவர் தனது தாய்க்கு இவைகளை சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தி கொள்வதற்கும் இது அவரை தூண்டியிருக்க வேண்டும். (பலவிதமான வாழ்க்கை அனுபவங்களுக்குப் பிறகு)

**வசனம் 3-9 :** இராஜாவின் தீர்ப்பைத் திசைதிருப்பி, அவரது நடவடிக்கைகளை பாதிக்கப்படும் என்பதற்காக இராஜாவுக்கு வலுவான பானத்தைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது. அதற்குபின் 10-31 வசனங்களில், ஒரு கணவனாக, தங்களுடைய குடும்பத்தின் தந்தையாக, சமுதாயத்தின் ஒரு உறுப்பினராக ஒரு மனிதனின் பங்கின் பதிப்பை, நல்லொழுக்கமுள்ள பெண், எவ்வாறு மேம்படுத்துகிறாள் என்பதை விவரிக்கிறது.

**வசனம் 10 :** "புத்தியுள்ள ஸ்திரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களை காட்டிலும் விலையுர்ந்தது" என்று கேட்கிறது. அவளைக் கண்டுபடிப்பதையும் அவளுடைய மிகப்பெரிய மதிப்பைக் கவனிப்பதையும் இந்த வசனம் குறிப்பிடுகிறது. இந்த சிந்தனை, ஒரு முத்தை கண்டுபிடித்து அதை வாங்குவதற்காக தன்னிடம் உள்ள அனைத்தையும் விற்ற ஒரு மனிதனைப் பற்றி இயேசு சொன்ன உவமைக்கு ஒப்பாக உள்ளது. (மத்தேயு 13:45-46) தான் கண்ட முத்து தனது வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட மதிப்புமிக்கது என்பதை அந்த மனிதன் உணர்ந்தார். எனவே அதை பெறுவதற்காக தன்னிடம் உள்ள அனைத்தையும் விற்றார். இந்த கருத்து நல்லொழுக்கமுள்ள ஸ்திரீக்கும் பொருந்தும். நல்லொழுக்கமுள்ள பெண் வெறும் மதிப்புக்குரியவளாக மட்டும் அல்ல, அதற்கு மேலாக அவளிடத்தில் ஈடுபாடுகொள்வது மதிப்புமிக்கது என்று லேமுயேல்

கற்பிக்கிறார். ஆகவே அவளைப் பெறுவது அல்லது கொண்டிருப்பதற்கு அதிகமாக அறிவுறுத்தப்படுகிறது. அவளுக்கு முதலீடு செய்வது என்பது, ஒருவர் அவளை மதிக்க, அவளை நேசிக்க, மற்றும் அவளுடன் அவருடைய உறவை தீவிரமாக வளர்க்க (முதலீடு) அறிவுறுத்தகிறது. நேசிக்கப்பட வேண்டும், அன்பு கூறவேண்டும், மற்றும் அவளது முயற்சிகள் எளிதாக இருந்தாலும் கூட, கணவரின் முயற்சியுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற விருப்பம் போன்ற அந்த மனப்பான்மை நல்லொழுக்கமுள்ள ஸ்திரீக்குள் காணப்படுகிறது.

10 ம் வசனம் அவளை ஒரு நல்ல "ஸ்திரீ" என்று குறிப்பிடுகையில், தொடர்ந்து வரும் பண்புகள் ஒரு மனைவியாகவும், ஒரு தாயாகவும் குடும்பத்தில் அவரது பங்கைப்பற்றி அதிகமாக பேசப்படுகிறது.

ஒரு பெண் திருமணம் செய்யாமல் நல்லொழுக்கமுள்ளவராக இருக்க முடியும். ஆனால் எந்தவொரு பெண்ணும் அழகான குணங்களை உருவாக்கக் கூடிய மற்றும் உதாரணம் காட்டி விளக்கக்கூடிய மாதிரியாக ஒரு மனைவி மற்றும் தாயின் கதாபாத்திரத்தை இந்த அதிகாரம் பயன்படுத்துகிறது. லெமுயேல் அவள் மதிப்பை புரிந்துகொள்வதற்கு முன்பே இவள் நல்லொழுக்கமுள்ளவளாக இருந்தாள்.

முத்துக்களை விட மற்ற பொருட்கள் ஐந்து முறை மட்டுமே மதிப்புள்ளதாக வேத வசனங்கள் விவரிக்கிறது. "ஞானம்", முத்துக்களை காட்டிலும் மதிப்புமிக்கது என்று யோபு28:18, நீதிமொழிகள் 3: 13-15,8:11, வசனங்கள் நமக்கு கற்பிக்கிறது. முத்துக்களை காட்டிலும் "அறிவு" மிகவும் மதிப்புள்ளது என்று நீதிமொழிகள் 20:15 ம் வசனமும் நமக்கு விளக்குகிறது. நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ, முத்துக்களை விட மதிப்புமிக்கவள் என்று நீதிமொழிகள் 31:10 கூறுகிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வசனங்கள் ஒன்றாக அறிவுறுத்தவதுயாதெனில் ஒரு குணசாலியான ஸ்திரீயாக இருப்பதினால், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு, "அறிவு மற்றும் ஞானம்" போன்ற மதிப்புமிக்கதாக இருக்க முயற்சிக்கிறது,மேலும் மற்றவர்களை ஊக்குவிக்க அறிவையும் ஞானத்தையும் பயன்படுத்தலாம். மறுபுறம், அறிவைப் பெறுவதற்கோ அல்லது ஞானத்தைப் பின்தொடர்வதற்கோ ஒரு மனிதன் எவ்வளவு முயற்சியோடும் வாஞ்சையும் வேலை செய்கிறாரோ, அதே அளவுக்கு தன் அன்பான மனைவியைப் புரிந்துகொள்வதற்கும், போஷிப்பதற்கும், வாஞ்சிப்பதற்கும் வேலை செய்யவேண்டும். ஏனெனில், வேதப்பூர்வமாக அவள் சமமான மதிப்புமிக்கவள்.

முத்துக்கள் போலஅழகானவைகளும், அவள் இரத்தினங்களை போல சிவப்பு நிறமுள்ளவளாகவும் விவரிக்கப்பட்டாலும் நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ அவற்றின் மதிப்பை விட மிக அதிகமாக மதிப்பு பெற்றவள். வேதத்தில் சிவப்பு பெரும்பாலும் பாவத்தை குறிக்கிறது. இந்த பாவ உலகம் வழங்கக்கூடிய மிக அருமையான விஷயங்களில் இந்த நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மிகவும் மதிப்புமிக்கவள் என்று இந்த வண்ண உருவகம் தெரிவிக்கிறது. அவள் சிவப்பு நிறத்தை விட சிறந்தவள், அவள் இயேசுவின் இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால் மூடப்பட்டவள், அந்த மூடலுக்காக நன்றி செலுத்துவது தெளிவாக தெரிகிறது. மேலும் தேவன் - மற்றும் அவரது கணவர் அவளுடைய குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல் அவளை நேசிப்பதாக, அவள் ஏற்றுக்கொள்ளப்படடவள் என்று அவள் உறுதியாக நம்புகிறாள்.

**11 வது வசனம் :** "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது" என்று கூறுகிறது. வாழ்க்கையில் நான்கு காரியங்களை நம்பும்படி வேதம் ஒரு மனுஷனுக்கு அறிவுறுத்துகிறது. தேவனை நம்புங்கள், தேவனுடைய குமாரனை நம்புங்கள், தேவனுடைய வார்த்தைகளை நம்புங்கள், அவருடைய நல்லொழுக்கமுள்ள மனைவியை நம்புங்கள். இதை உணர்ந்த நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ, மனித ரீதியாக முடிந்தவரை முற்றிலும் நம்பகமானவளாக இருக்க முயற்சிக்கிறாள். இந்த நான்கு பேர்களின் பட்டியலில் காணப்படும் ஒரே மனிதர், நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ ஆவார். எந்தவொரு மனிதனும் முழுமையாக நம்பத் தகுந்தவராக இருக்க முடியாது. ஆனால் கணவன் அவள் மீது நம்பிக்கை கொள்ளும் திறன் தேவனை நம்புவதற்கான திறனைப் போன்றது என்பதை எளிமையாக உணரும் போது, வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் அவரது நம்பிக்கையை சம்பாதிக்க வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பத்துடன் அவளுக்கு உட்புக வேண்டும்.

அவருடைய இருதயம் அவளை நம்புகிறது என்று 11வது வசனம் கூறுகிறது. நல்லொழுக்கம் உள்ள ஸ்திரீ மனைவியாக இருக்கும்போது, மனைவியாக இருக்கும் அவள் பங்கு, கணவனின் நம்பிக்கைக்குரியவளாக இருக்கவேண்டும். அந்த பங்கில், அவள் தனது கணவரின் இருதயத்தின் மிக நெருக்கமான எண்ணங்களையும் விவாதங்களையும் அச்சங்களையும் பகிர்ந்து கொள்கிறாள். அவள் அவற்றை தேவனைத் தவிர வேறு யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை. இந்த வகையான நம்பிக்கை (அவரது மனைவி மீது), ஒரு மனுஷனின் இருதயத்தில் பாதுகாப்பு, இணைப்பு மற்றும் தைரியத்தின் உணர்வுகளை உருவாக்குகிறது.

ஒரு கணவனின் நம்பிக்கையின் உணர்வு, அவர் கெட்டுபோவதற்கான தேவைகளை மறுக்கிறது என்றும் இந்த வசனம் கூறுகிறது. இது ஒரு சுவாசரஸ்யமான

உருவகம். சம்பத்து (Spoil) என்பது வன்முறை அல்லது திருட்டுத்தனத்தின் மூலம் பெறப்படும் பொருட்களின் உத்தேச மதிப்பாகும். வாழ்க்கைத் துணைவர்களிடையே முழுமையான நம்பிக்கை, முழுமையான இணைப்பு, முழுமையான பாதுகாப்பு இருக்கும்போது, தேவனைத் தவிர வேறு எந்த மூலத்திலிருந்து நிறைவு, இணைப்பு அல்லது சரிப்பார்ப்பு ஆகியவற்றைக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. வாழ்க்கைத் துணையின் இருதயத்தில் இந்த வகையான நம்பிக்கை பலத்தையும், பாதுகாப்பையும் அன்பையும் விளைவிக்கும். இதுவே உண்மையில் ஒருவருக்கொருவர் கொடுக்கக்கூடிய பரிசாகும்.

குணசாலியான ஸ்திரீ தன் குடும்பத்தின் சார்பாக செலவழிக்கும் விடாமுயற்சியான ஆற்றலைப் பற்றி **13-27 வசனங்கள்** பேசுகிறது. மேலும் ஒவ்வொரு வசனமும் அவர்கள் மேல் அவள் வைத்திருக்கும் அன்பையும், அக்கறையையும் நிரூபிக்க அவள் செயல்படும் பல்வேறு வழிகளைக் குறிக்கிறது.

தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு பாலும், தேனும் பாயும் தேசத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வதாக வாக்களித்தார். இந்த வெளிப்பாடு, அவர்களின் ஒவ்வொரு தேவைக்கும், தேவன் அளிக்கக்கூடிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். பாலும் தேனும் பாயும் தேசத்திற்கு ஏராளமான மந்தைகள், புல்வெளி, நீர், பழ மரங்களின் தோப்பு, பூக்களின் வயல் மற்றும் மகரந்தச் சேர்க்கைக்குத் தேவையான தேனீக்கள் தேவைப்பட்டது. எனவே, "பாலும் தேனும்" என்பது அவர்களின் ஒவ்வொரு தேவையும் வழங்கப்படும் என்பதைக் குறிக்கிறது. இரு நீதிமொழிகள் 31: 13 ல் உள்ள "ஆட்டுமயிர் மற்றும் சணல்" என்ற காரியங்களுக்கு ஒத்திருக்கிறது. தன் குடும்பத்தினரை குளிர்காலத்தில் ஆட்டு மயிரினாலும், கோடையில் சணல் வஸ்திரத்தினாலும் அணிவிக்கிறாள். நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ தனது குடும்பத்திற்கு தேவையான ஒவ்வொன்றையும் ஏற்ற சூழ்நிலையில் வழங்குகிறாள்.

குணசாலியான ஸ்திரி, "இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்." என்று **15ம் வசனம்** கூறுகிறது. தான் நேசிப்பவர்களுக்கு சேவை செய்ய அவள் தன்னை நிலைநிறுத்துகிறாள். இந்த குணம் அப்போஸ்தலர் 16: 13-15ல் உள்ள லீதியாளை நமக்கு நினைவூட்டுகிறது. லீதியாள் தேவனை வணங்கிய ஒரு பெண்ணாக இருந்ததால் ஒரு ஆற்றண்டையில் வழக்கமாக தேவனை ஆராதித்து, ஜெபிக்கும் இடத்திற்கு அவள் சென்றதாக விவரிக்கப்படுகிறது. தேவனுடைய முன்னேற்பாட்டின்படி, ஒரு நாள் அவள் ஆற்றண்டையில் ஜெபிக்கையில் பவுலிடமிருந்து சுவிசேஷத்தை பெற்றாள். உடனடியாக லீதியாள் தன் வீட்டாரோடு ஞானஸ்நானம் பெற்றாள். ஒரு பணியாளரின் இருதயத்தோடு பவுலை உபசரித்தாள்.

"புறஜாதியினருக்கு நியமிக்கப்பட்ட அப்போஸ்தலனை" லீதியாளின் குடும்பத்தினர் தங்கள் சொந்த வீட்டில் வைத்திருந்தது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என்பதை முழுமையாக புரிந்துகொள்வது கடினம். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் பவுல் மீண்டும் அவளுடைய வீட்டிற்கு திரும்பியபோது, அவளுடைய விருந்தோம்பலினால் பவுல் ஆசீர்வதிக்கப்பட்டு, ஆறுதல் அடைந்தார். (அப்போஸ்தலர் 16:40) ஆவிக்குரிய ஆகாரத்தை தன் வீட்டாருக்கு கொடுப்பதற்கு இருட்டோடே எழுந்திருக்கும் குணசாலியான ஒரு ஸ்திரீக்கு, லிதீயாவின் சாட்சி, ஒரு அருமையான எடுத்துக்காட்டாகும்.

குணசாலியான ஸ்திரீ தன் ஊழியக்காரிகளுக்கு படியளக்கிறாள் என்றும் 15ம் வசனம் கூறுகிறது. தெய்வ பக்தியுள்ள பெண்மைக்கு ஒரு ஜீவனுள்ள மாதிரியாக மாறுவதே, குறிப்பாக அவளுடைய கூடுகையில் இருக்கும் இளைய ஸ்திரீகளுக்கு, கிறிஸ்தவ வாழ்க்கையின் வழியாக முன்னேறி செல்லுவதற்காக அவள் பெற்ற சலுகைகளில் ஒன்றாகும். இந்த சலுகையைப் பற்றி பவுல் பேசுகிறார்: "முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்," (தீத்து 2:3-4) அவளுடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல, அவளை சுற்றியுள்ள முழு கிறிஸ்தவ சமூகத்திற்கும், எவ்வளவு அற்புதமான ஒரு சேவை.

"தன்னைப் பெலத்தால் இடைக்கட்டிக்கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறாள்." என்று 17ம் வசனம் கூறுகிறது. கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றபவர்களாக இருப்பதற்கான மகத்தான சிலாக்கியத்தில், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் விடாமுயற்சியோடு பயணிப்பதற்கு பேதுரு அறிவுறுத்துகையில் "உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்வதைப்" பற்றி அவர் பேசுகிறார். (1பேதுரு1:13)

சாமுயேலின் தாயாகிய அன்னாளின் அருமையான ஜெபமும், அவள் பெற்ற பலமும் விடாமுற்சிக்கு ஒரு நல்ல படிப்பினையாகும். (1சாமுயேல் 2:4, 9-10) கடினமான அனுபவங்களைத் தாங்கியபின், தன் சொந்த பலத்தால் வெற்றிபெற முடியாது என்பதை அவள் உணர்ந்தாள்.

இந்நிலையில், அவள் முழங்காலிட்டு, தேவனிடம் வலிமைக்காக கெஞ்சினாள். அந்த ஆவிக்குரிய அடித்தளத்தில், அவள் தேவனுடைய பலத்தால் தன் மனதின் அரையைக் கட்டிக்கொள்ள முடிந்தது. இஸ்ரயேலின் வரலாற்றில் மிகப் பெரிய ஆவிக்குரிய ஊழியர்களில் ஒருவரை அவள் மகனாகப் பெற்றாள்.

"தன் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான்." என்று **23ம் வசனம்** கூறுகிறது. குணசாலியான ஸ்திரீ சமுதாயத்தில் தன் கணவனுக்கு ஆவிக்குரிய வேலைகளிலும் ஆதரவாக இருக்கிறாள் என்பதையும், அவருடைய வேலையின் மதிப்பின் ஒரு பகுதியானது அவரது ஆதரவான மனைவி, குடும்பத்திற்கு அளிக்கும் பங்களிப்பின் விளைவாகும் என்பதையும் இது குறிக்கிறது.

"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்." (கொலோசெயர் 3:18)என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்துகிறார். கணவனைப் புரிந்துகொள்வதற்கும், அவரது பலங்களையும், பலவீனங்களையும் கண்டுபிடிப்பதற்கும், தேவனுக்கு அவர் செய்யும் சேவையில் அவளுடைய விசித்திரமான நுண்ணறிவைப் பயன்படுத்தி அவரை ஆதரிக்கும்படியாக அறிவுறுத்தப்படுகிறது. அவர் தோல்வியுறும்போது, ஆதரவளிக்கும் குணசாலியான மனைவியின் புலப்படும் எடுத்துக்காட்டு, கணவனின் எந்தவொரு பொதுவான வார்த்தைகளை விட சக்திவாய்ந்த செய்தியாக இருக்கும்.(1பேதுரு3:1-2)

**28 வது வசனம்** அவளுடைய குழந்தைகளின் குணலட்சணத்தின் தரம் அவளுடைய நல்லொழுக்கத்தின் அளவீடு என்று கற்பிக்கிறது. ஆரம்பத்தில் அடிக்கடி எதிர்க்கும் குழந்தைகள், குழந்தை பருவத்தை விட்டு வெளியேறும் போது, வாழ்க்கையில் சில குறிப்பிடத்தக்க அனுபவங்களுக்குப் பின், திரும்புவார்கள் :" என் தாயின் நீண்டகால உதாரணத்தின் காரணமாக, நான் அவளுடைய தேவனை நேசிக்கக் கற்றுக்கொண்டேன், அல்லது எனக்கு தெரிந்த மிக இரக்கமுள்ள நபர் என் தாய்". ஒரு குழந்தை இந்த முடிவுக்கு வர பல வருடங்கள் ஆகலாம் என்றாலும், குணசாலியான ஸ்திரீயின் பிள்ளைகள் எழுந்து அவளை ஆசீர்வதிப்பார்கள்.

காலப்போக்கில், குணசாலியான ஸ்திரீயின் வெளிப்புற அழகு மங்கி, அவளது உள்ளார்ந்த அழகு வளர்கிறது என்று **30 வசனம்** கூறுகிறது. இந்த நிகழ்வு அவள் தேவனை நேசிக்கிறாள் என்பதற்கான வல்லமையுள்ள சான்றாகும், இதற்காக அவள் பாராட்டப்பட வேண்டும்.

**31ம் வசனம்** முடிசூட்டப்பட்ட வசனம். குணசாலியான ஸ்திரீ தான் நேசிப்பவர்களின் நற்மதிப்பு, நற்பெயர் மற்றும் ஆறுதலுக்கு எவ்வாறு பங்களிப்பு செய்கிறாள் என்றும் தன் பிள்ளைகளின் தரம் மற்றும் கணவனின் மதிப்புக்கும் அவளுடைய முயற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை முந்தைய வசனங்கள் பல கற்பிக்கின்றன. இருப்பினும், 31 வது வசனம் அவள் உழைத்த ஆசீர்வாதங்களுக்கான நன்மையை அவளுக்கு அளிக்கிறது.

லேமுயேலின் இறுதி ஆலோசனை என்னவென்றால், நம் வாழ்க்கையில் உள்ள குணசாலியான ஸ்திரீக்கு அவளுடைய மதிப்பை நாம் கவனித்து, அதற்காக அவளை நேசிக்க வேண்டும் என்பதே. குணசாலியான ஸ்திரீயின் மதிப்பையும் புகழையும் பற்றிய உத்வேகமான பாராட்டைக்கொண்டு நமக்கு வழிகாட்டுகிறார்: அவளுடைய குடும்பத்துக்கும், அவளுடைய ஆவிக்குரிய ஐக்கியத்துக்கும், அவள் கிறிஸ்துவின் சரீரத்திற்குக் கொண்டு வரும் கிருபையிலும் அவளுடைய மதிப்பு.

**ஞானமுள்ள மனுஷன் செவி கொடுப்பார்**

# ஞானத்தின் வாழ்க்கை முறை



***Todd Alexander***

"புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து;நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்.கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்." (நீதிமொழிகள் 1:5-7)

தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தபோது, உலகை ஆளும்படி அவர்களை நியமித்தார். (ஆதியாகமம் 1:28) தேவனுடைய ஞானத்திற்கு கீழ்படிந்து வாழ்வதற்கும் அல்லது நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்து, கீழ்ப்படியாமல் இருப்பதற்கும், தேவன் அவர்களுக்கு சுதந்திரம் கொடுத்தார். (ஆதியாகமம் 2:9) தடை செய்யப்பட்ட கனியை புசித்து, கீழப்படியாமல் இருப்பதற்கான அவர்களின் முடிவு, அவர்களை துன்பத்திற்கும், மரணத்திற்கும் வழிநடத்தியது. மேலும் மனுக்குலம் அனைவருக்கும் இதே நிலை ஏற்பட்டது. இருப்பினும், தேவன் அவர்களுக்கு ஒரு இரட்சகரின் நம்பிக்கையை அளித்தார். (ஆதியாகமம் 3:15)

பல காலங்களுக்குப்பின் இஸ்ரயேல் தேசத்தை ஆட்சி செய்வதற்கான தேவனுடைய கட்டளையை உண்மையாக நிறைவேற்றும்படிக்கு நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வித்தியாசத்தை புரிந்துகொள்ளும் ஞானத்திற்காக இராஜாவாகிய சாலொமோன் தேவனிடம் ஜெபித்தார். (1இராஜாக்கள் 3:9)

சாலொமோன் கேட்டத்தை விட அதிகமாகவே தேவன் அவரை ஆசீர்வதித்தார். அவருடைய கீழ்ப்படிதலின் விளைவாக, சாலொமோன் இராஜாவின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரயேல் தேசம் முழுவதும் தாண் முதல் பெயெர்சேபா மட்டும் சமாதானமாக இருந்தது. ஒவ்வொரு மனுஷனும் தனது சொந்த திராட்சை செடியின் கீழும், அத்தி மரத்தின் கீழும் சமாதானமாக வாழ்ந்தனர். "சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டும், யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்." (1இராஜாக்கள் 4:25) இருப்பினும், பல ஆண்டுகளுக்குப் பின், சாலொமோன் இராஜா தேவனை விட்டு விலகினார்.

நீதிமொழிகளின் புத்தகம், சாலொமோன் இராஜாவின் சொந்த வெற்றிகளிலிருந்தும் தோல்விகளிலிருந்தும் பாடங்களை கற்றுக்கொள்ளும் அவரது அழைப்பிதழாகும். இது நம்முடைய முழு இருதயத்தோடும் தேவனை நம்புவதிலிருந்து தொடங்குகிறது, மேலும் நம்முடைய சொந்த ஞானத்திற்கு பதிலாக தேவனுடைய ஞானத்தில் நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றி ஆயிரக்கணக்கான விவரங்கள் அதை தொடர்கிறது. பதினான்கு தனித்தனியான சந்தர்ப்பங்களில், "கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் " வாழ்ந்ததாக சாலொமோன் குறிப்பிடுகிறார். (நீதிமொழிகள் 1:7,29, 2:5, 8:13, 9:10, 10:27, 14:26-27, 15:16,33, 16:6, 19:23, 22:4, 23:17) ஆதாமும் ஏவாளும், தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆதிக்கத்தின் மீது ஞானமுள்ள மனித ஆட்சியாளர்களாக இருப்பதில் தோல்வியுற்றது போல இருக்கலாகாது என்று சாலொமோன் நமக்கு அறிவுறுத்துகிறார்.

3ம் அதிகாரத்தில், சாலொமோன் இராஜா ஞானத்தை ஒரு பெண்ணாகக் குறிப்பிடுகிறார். மேலும் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளின் காரியத்திற்கு மிக நெருக்கமான மொழியைப் பயன்படுத்துகிறார். "அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான" (நீதிமொழிகள் 3:18) நாம் அனைவரும் நம் சொந்த மரத்திற்கு முன் நின்று தேர்வு செய்யவேண்டிய நிலையில் நிற்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள சாலொமோன் நமக்கு உதவுகிறார். நீதிமொழிகளின் புத்தகத்தில், நாம் கீழ்ப்படிதலையும், ஜீவனையும் தேர்வு செய்யவேண்டும் என்று அவர் நம்மை வற்புறுத்துகிறார்.

எதிராளியினால் சோதிக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும், அறிவை சுயாதீனமாக தேடின காரணத்தினால், தேவனிடமிருந்து பெற்ற கட்டளையை கடைபிடிக்க தவறினார்கள். புரிதல், ஞானம் மற்றும் அறிவை நாம் சுயமாக தேடுவதால், தேவன் நமக்கு வழங்கிய ஞானத்திலிருந்தும், அறிவிலிருந்தும் விலகி செல்வதற்கு, அன்றுபோல இன்றும் சமமாக சோதிக்கப்படுகிறோம்.

ஞானமாக வாழும் முறைக்கு தேவையான அறிவுறுத்தல்களை நீதிமொழிகளின் புத்தகம் வழங்குகிறது. இன்று, வழிகாட்டியாகிய சாலொமோனை காட்டிலும் பெரியவர் நம்மோடு இருக்கிறார். இயேசுவே வாக்களிக்கப்பட்ட இரட்சகரும், நம்மை மென்மையாக வழிநடத்தும் மேய்ப்பர். ஆனால் நம்முடைய சொந்த வாழ்க்கையில் நாமே கதாநாயகன். ஆதாம் ஏவாள் மற்றும் சாலொமோன் இராஜாவைப் போலவே, நாம் வடிவமைக்கும் வாழ்க்கைத் தரம், கர்த்தருக்குப் பயன்படுவதற்கும், நம்முடைய வேலையின் விடாமுயற்சிக்கும் நேரடியான விகிதாசாரமாகும்.

ஞானமுள்ள ஒரு மனுஷன் செவி கொடுக்கிறார், ஞானமுள்ள மனுஷன் கற்றலை அதிகரித்து கொள்கிறார், ஞானமுள்ள மனுஷன் ஒரு ஞானமுள்ள வழிகாட்டியாகிறார், ஞானமுள்ள ஒரு மனுஷன் சத்தியத்தை சரியாக விளக்குகிறார். இவை தேவனிடமிருந்து வந்த எளிமையான உண்மைகள். ஆனால் அவை எளிதானவை அல்ல. இவைகள் கீழ்ப்படிதலுடன் தொடங்குகிறது.

# நியாயத்தீர்ப்பின்றி மரணமா?

"அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும் அப்படி இராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது" 1தீமோ.5:24 **(NKJV)**

ஆகஸ்ட் 30ம் நாள், ஜிம்பாவேயின் முன்னால் பிரதமரான, ராபர்ட் முகாபே, சுதந்திரமும் செல்வாக்கும் மிக்கவரான அவர் தனது 95 வது வயதில் சிங்கப்பூரில் ஒரு ஆடம்பரமான மருத்துவமனையில் உயிர் நீத்தார். நீதியின்படி அவர் சிறையில் மரித்திருக்க வேண்டும். மனிதகுலத்திற்கு எதிரான கொடூரமான குற்றங்களுக்கு நீண்ட தண்டனை வழங்கப்படுகிறதினால் ஆகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வளரும் நாடுகளில் சர்வாதிகரங்கள் பரவியபோது, ராபர்ட் முகாபே வெள்ளை சிறுபான்மை ஆட்சியை அகற்றுவதற்கான போராட்டத்தை அப்போது ரோடீசியா என்று அழைத்தார். அந்த நேரத்தில் அவர் கருப்பு ஆப்பிரிக்காவிற்கு நம்பிக்கை வழங்கியமையால், கொரில்லா தலைவராகவும் அரசியசியல் கைதியென இரு வகையில் கொண்டாடப் பெற்றார். 1980க்குப் பிறகு முகாபபே தனது வல்லமையைப் பெற்றுக்கொண்டவராக தான் சானியாவின் தலைவரான ஜீலியஸ் நயேரேரே வை நோக்கி தீர்க்கதரிசனமாக எச்சரித்தார். நீங்கள் ஆப்பிரிக்காவில் ஒரு நகையை சொத்தாக வைத்துள்ளீர்கள். அதைக் களங்கப் படுத்தாதீர்கள். ஆலோசனையை புறக்கணித்து, முகாபே 37 ஆண்டுகளாக நாட்டிற்கு பயங்கரவாதத்தை கொண்டு வந்தார்.

அனைத்து அரசியல் பிளவுகளும் கடுமையாகக் கையாளப்பட்டன "நாங்கள் நம்முடையே அந்த பாம்பைக் கொல்வோம்" என்று அவர் அறிவித்தார். அவர் நெடெபெலே மற்றும் கலங்கா மக்களிடமிருந்து தொடங்கி, அரசியல் ரீதியாக விசுவாசமற்றவர் என்று கருதினார். ஆவர் குக்குராஹீண்டி மக்களை "மக்கள் புயல்" என அறிவித்தார். இது 1983ஆம் ஆண்டில் வடக்கு பிராந்தியமான மாட்டாபெலண்டிற்கு வெகுஜனக் கொலையைக் கொண்டுவந்தது. வட கொரியர்களால் பயிற்சியளிக்கப்பட்ட ஒரு இராணுவக் குழுவான ஒரு மோசமான ஐந்தாவது படைப்பிரிவினை ஸ்தாபனம் செய்தார். ஜீம்பாவேயின் தெரு பகுதியில் மாட்டாபெலன் பின் இடையில் முகாபே 1983 முதல் 1987 வரையிலும் விரிவுபடுத்திவைத்தார். அடித்தல், தீ வைத்தல், பொது மரணதண்டனை மற்றும் படுகொலைகள் ஆகியவற்றின் பிரச்சாரத்தை படைப்பிரிவு மேற்பார்வையிட்டது.

நீதி மற்றும் அமைதிக்கான கத்தோலிக்க ஆணையமானது குறைந்தது 2000 இறப்புகளை ஆவணப்படுத்தியது, ஆனால் உண்மையான எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகமாக இருப்பதாகக் கூறியது. நடெபேலே மக்கள் 20000 பேர் கொலை செய்யப்பட்டனர். முகாபே தனது அரசியல் கட்சியின் கீதத்தைப் பாடும்போது குழந்தைகளின் பெற்றோரின் எரிந்த உடல்களில் நடனமாடச் செய்தார். குக்குராஹீண்டியில் தப்பித்தவர் களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முகாபே ஒருபோதும் நீதிக்கு அடிபணியவில்லை. பின்னர் "ஆயிரக்கணக்கான வர்கள்" கொல்லப்பட்டதாக ஒப்புக் கொண்டதோடு, அவர் கட்டளையிட்ட படுகொலைகளை "ஒரு கணம் பைத்தியக்காரத்தனமாக" குறிப்பிட்டார்.

கிரேட் மிக் புத்தகத்தின் பயங்கரமான விஷயங்களின் ஆசிரியர் மத்தேயு வைட் அளித்த பகுப்பாயவின்படி சர்வாதிகரிகளையும் போர்வீரர்களையும் தப்பித்த மற்றவர்கள் கோபமடைந்த மக்கள் அல்லது படுகொலையாளரின் கைகளை விட வயதானவர்கள் அல்லது நோயால் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். உறுதியான நாளேடு வரலாற்றின் 100 மோசமான அட்டூழியங்கள். வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, ஒடுக்குமுறையான போர்க்குணமிக்க வகைகளில் 60 சதவிகிதம் "மகிழ்ச்சியுடன் எப்போதும்" வாழ்கின்றன. அவை ஒரு போதும் குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நேரத்திற்கு ஆளாகவில்லை. அவற்றில்

• ஜோசப் ஸ்டாலின் ரஷ்யா (1878 - 1953) உத்தியோகபூர்வ பதிவுகள் குறைந்தது. 3 மில்லியன் மக்கள் மரணதண்டனை மற்றும் அவரது முகாமில் அழகான முகாம்களில் இறந்துவிட்டதாக தெரிவிக்கின்றன. தனது 73 வது வயதில் தனது அரசியல் சாகாக்களுடன் இரவு உணவு மற்றும் திரைப்படத்திற்குப் பிறகு மார்ச் 1, 1953 அன்று அவர் படுக்கைக்குச் சென்றார். காலையில் ஒரு போதும் தனது அறையிலிருந்து வெளியே வரவில்லை.

• பிரான்சிஸ்கோ பிராங்கே, ஸ்பெயின் (1892 - 1975) இவர் ஸ்பெயினை 1939 ஆம் ஆண்டு இருந்து தாம் மரணமடையும் 1975 வரை ஆட்சிபுரிந்தார். அவர் தனது எதிரிகளை தணிக்கை செய்தார். அரசியல் முகாம்களை உருவாக்கி, அவருக்கு எதிராக பேசிய சிலருக்கு மரண தண்டணையை விதித்தார். அக்டோபர் 30, அன்று பார்கின்சன் நோயின் சிக்கல்களிலிருந்து கோமாவுக்குள் நுழைந்த பின்னர், அவர் தனது 82 வது வயதில் காலமானார்.

• ஆகஸ்டோ பினாசே, சில (1915 - 2006) 1973ல் இராணுவ ஆட்சி மாற்றத்தால் ஆட்சிக்கு வந்த அவரது ஆட்சி அதிருப்தியாளர்களைக் கொன்று சிறையிலடைத்து ஆயிரக்கணக்காள குடிமக்களை சித்திரவதை செய்தது. 36 கடத்தல், 23 சித்திரவதை மற்றும் ஒரு கொலை குற்றச்சாட்டு ஆகிய இரண்டு மாதங்களுக்குள், டிசம்பர் 3, 2006ல் பினாசோ ஒரு இறுதி மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். அவர் ஒரு வாரம் கழித்து இறந்தார்.

• இடி அமீன், உகாண்டா (தோராயமாக 1925- 2003) அவரது ஆட்சியின் கீழ் உகாண்டாவில் நூறாயிரக்கணக்கானோர் இறந்தனர். இது 1971 ல் ஒரு இராணுவ சதித்திட்டத்துடன் தொடங்கியது. 1979 ல் பதவி நீக்கம் செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட அவர் சவுதி அரேபியாவின் குடியேறினார். பல ஆண்டுகளாக வசதியாக வாழ்ந்தார். அமீன் சிறுநீரகக் கோளாறின் காரணமாக ஆகஸ்ட் 2002வ் தனது 5வது மனைவியின் அருகில் மரணமடைந்தார். அமீனின் பிறந்த வருடம் தெரியாவிடினும், ஆனால் 80 வயது பூர்த்தியடைந் திருக்கலாம்.

பட ம ஸூ ம னு ஸ”

"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத் திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்.12:35,36

சும்மா இருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் - ஒவ்வொரு லாபகரமான சொற்களும் - கணக்கிடப்படும் நாளில் கணக்கிடப்பட வேண்டும் என்று இயேசு அறிவித்தார். தேவாலயத்துடன், இந்த கணக்கீட்டு நாள் நற்செய்தி யுகம் என்று வேதங்கள் கற்பிக்கின்றன. அனுதினமும் நமது பரலோகப்பிதாவிடம் இவ்வாறாக கேட்க வேண்டும். "எங்கள் கடன்களை மன்னியும் (தப்பிதங்களை) எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்களுக்கு விரோதமாக தப்பிதம் செய்பவர்களை மன்னியும். மத்தேயு: 6:12 வேத மாணவர்களாக நாம் அவரிடம் அநேக பாடங்களைக் கற்றுக்கொண்டு இவ்வாண்டின் இறுதியில் சுயபரிசோதனையினை மேற்கொண்டு மற்றும் கிறிஸ்துவின் பள்ளியின் மாணவர்களாக நாம் செயல்பட வேண்டும். குருவிடமிருந்து படிப்பினைகளைக் கற்றுக்கொள்வது, இயேசுவின் இரத்தத்தின் மூலம் நீதிமானக்கப்பட்டு, தங்கள் வாழ்க்கையை உடன்படிக்கை செய்து இருப்பவர்களுக்கு அவர்களுக்கான நியாயத்தீர்ப்பானது அவர்களின் பூமிக்குரிய பயணத்தின் முடிவில் வழங்கப்படுகிறது. நல்லது உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தில் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி மத்தேயு 25:21, வெளி: 2:10

எவ்வாறாயினும், நீதிமானக்கப்பட்ட வர்களுக்கும் (விசுவாசமுள்ள உடன்படிக்கை செய்த ஊழியர்கள்) மற்றும் நீதிமானற்றவர்களுக்கும், இருவருக்குமே உயிர்த்தெழுதல் உண்டென அப். பவுல் நம்மிடம் கூறுகிறார். அப். 24:15 பூமிக்குரிய வாழ்வில் "நீதிமான் நிலையை தக்க வைத்துக் கொண்டவர்கள் உயிர்த்து மரணத்திலிருந்து வரும்போது நீதியை நினைவுப்படுத்திக் கொள்ள முடியும் என வேத வசனங்கள் கூறுகின்றன. அவர்கள்

மரணமடையுமுன்னர் எவ்வாறான சிந்தை மற்றும் சுபாவமுடையவர்களாக இருந்தனரோ அவ்வாறே உயிர்த்தெழுந்து வருவர் என வசனங்கள் கூறுகின்றன. " நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" பிரசங்கி 9:10

இப்போது தீமையை பயிற்சி செய்யும் நபர்கள் ஜீவன் அல்லது மரணத்திற்கான நியாயத்தீர்ப்பில் இல்லை என்றாலும், அவர்கள் முற்றிலும் வெளிச்சம் மற்றும் நன்மை அல்லது தீமையை தேர்ந்தெடுக்கும் திறன் இல்லாமல் இல்லை. உலக வரலாற்றின் இருண்ட நாட்களிலும் மிகக் கொடூரமான காலங்களிலும், நீதியையும் நல்லொழுக்கத்தையும் சுட்டிக்காட்டும் மனசாட்சியின் வெளிச்சத்தின் அளவு எப்போதும் இருந்திருக்கின்றன. "அவர் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீ போகலாம் எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்" அப்.24:25டயக்லாட் வில்சன் எதிர்கால தீர்ப்பைப் பற்றிய தனது பார்வையில் இந்த பொறுப்புணர்வை தானியேல் அடையாளம் கண்டார். பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில், சிலர் நித்திய ஜீவனுக்கும் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் எழுந்திருப்பார்கள் தானியேல் : 12:2.

## யெகோவா தேவன் பழிவாங்குவார்

மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் .... நீதி. 5:21-22 இந்த யுகத்தின் சமரசம் செய்யப்பட்ட மனசாட்சி மற்றும் தீய செயல்களுக்கு ஆயிரவருடத்தில் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்பு இருக்கும் என்று இந்த வேதம் அறிவுறுத்துகிறது. மனசாட்சியின் நன்மை பயக்கும் பயிற்சியில் செய்யப்படும் நல்ல செயல்களுக்கு வெகுமதி இருக்கும் என்று வேதம் குறிப்பிடுவது போல "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத்தேயு 10:42

நீதியான நியாயத்தீர்ப்பானது கிறிஸ்துவின் ராஜ்யத்தின் யுகத்தில் காணப்படும். இன்னுமாக அந்தயுகத்தில் அனைவரும் மாபெரும் வாய்ப்புகளும், மற்றும் கடுமையான ஒழுங்குமுறைகள் மற்றும் அதற்கான சோதனைகள் மற்றும் தண்டனைகள் பலருக்கும் காணப்படும். தீர்ப்பு நியாயமானதாகவும், பக்கசார்பற்றதாகவும் இருக்கும். மேலும் சூழ்நிலைகள் மற்றும் ஒவ்வொரு நபரின் வாய்ப்பபுகளையும் கருத்தில் கொண்டு நியாயாதிபதியின் தன்மையால் உறுதிப்படுத்தப்படும். யோவான் 5:22,1கொரி. 6:2 இயேசுவின் பரிபூரண அறிவு, அவரது அசைக்க முடியாத நீதி மற்றும் நன்மை, அவரது தெய்வீக சக்தி மற்றும் மனிதர்களை மரணத்திலிருந்து மீட்பதற்கான அவரது தியாகத்தில் காட்டப்படுள்ள அவரது அன்பு ஆகியவை நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தனிப்பட்ட விசாரணையின் பாக்கியாத்தை உறுதிப்படுத்துகின்றன. கூடுதலாக "நீதிமான்களின் உயிர்த்தெழுதலை" அடைவதற்கு தகுதியுள்ளவர்கள் சேதமடைந்த வர்களை கையாள இரக்கம் கொண்ட பயிற்சி பெற்றிருப்பார்கள்.

துன்மார்க்களுடைய புயங்கள் முறியும். நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார். சங்கீதம் 37:17 இவ்வாறகக் கூறுகிறார்.இவ்வாறாகக் கூறுகிறார். உடைந்தகரங்கள் குணமடையும். இயேசுவின் ஆட்சியின் கீழ், நீதி மேலோங்கும். நீதியின் கொள்கைகள் கொடுமை மற்றும் அநீதியை அறிந்த அனைவரையுமே பாதுகாக்கும். மரியாதை நேர்மை மற்றும் நல்லொழுக்கம் ஆகியவை புதிய உடன்படிக்கையின் எழுதப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் இருக்கும். இந்த தீர்ப்பின் நற்பண்பு நீதியின் நிரந்தர ஸ்தாபனமாக இருக்கும். யெகோவா எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்வார். பிலி. 4:7